சிவமயம்

குமரகுருபரன்

மலர் 14] 1963-ஆம் மார்கழி மீ 1ம் உ (16-12-63) [இதழ் 12

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண்டர் அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 6.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

1. சிதம்பரச்செய்யுட்கோவை (கட்டுரை 75) ... 601
2. நீதிநெறிவிளக்கம் (உரை நடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்) ... 608
3. பாரதி சபதம் — பாஞ்சாலி சபதம் ... 611
4. திருவருட்பயன்—தெளிவுரை ... 622
5. அப்பர் சுவாமிகளின் அற்புதத் திருப்பதிகங்கள் (ஆங்கில மொழிபெயர்ப்பு) 626
6. ஈங்கோய் இலக்கியம் 628
7. Hymns of the Tamil Saivite Saints 634
8. சேக்கிழார் கவிவளம் 635
9. தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள், பொழிப்புரையும் ஆங்கிலமொழி பெயர்ப்பும் 639
10. திருவருள் 640
11. அகம்பல் மால் ஆதனார் ... 643
12. திருவிடைமருதூரில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு நிதி ரூ. 5000/- ... 645

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்

மலர் 14 | சோபகிருது-ஞு மார்கழித் திங்கள் 1-ம்வ [16-12-63] | இதழ் 12

சிதம்பரச் செய்யுட் கோவை

தொண்டைமண்டலாதீனம் குருமகா சந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

[கட்டுரை 75]

சிதம்பரச் செய்யுட் கோவையின் குறிக்கோள், யாப்பிலக்கணத்தின் கண் உணர்த்தப்படும் பாவும் பாவினமும் சிவபரமாக அமைதல் வேண்டும் என்பதே. முன்னைய யாப்பிலக்கண நூல்களுள் அப்பாவும் பாவினமும் உதாரணமாக இருக்கலாம் அன்றிச் சிவபரமாக இரா. ஆசிரியர் குமரகுருபர முனிவர்க்கு யாப்பிலக்கணம் தெரியாது என்றவரது செருக்கை யடக்கப் பாடி, அதுவும் நன்கு தெரியும் என்று காட்டிய வரலாறு முன்னரே அறிந்த

தொன்று. அவ்வாற்ருல் கொண்ட ஆசிரியர், குறிக்கோள் இது:- எல்லாப் பாவிற்கும் பாவினத்திற்கும் உதாரணம் சிவபரமாகக் கொண்டு சைவருலகம் வழங்கி வாழ்தல் வேண்டும் என்பதே. நம் காலத்திலே பாம்பன் குமரகுருதாச சுவாமிகளும் 'திருவலங் கற்றிரட்டு' என்று இக் குறிக்கோளுடன் பாடியருளினுர்கள். அது குகபரமான செய்யுட்களை யுடைய இருப்புக்கடலை. அதை மெல்ல வல்லார் அரியர்.

இதற்குமுன் எழுதிய கட்டுரைகளுள் யாப்பியலைக் குறித்து எழுதினேம் அல்லேம். காரணம்:- தொல்காப்பியச் செய்யுளியல் வழக்கில் இல்லையே என்ற குறையும் செய்யுளிலக்கணம், தொல் காப்பியர் கருத்துக்கு வேருகவும் பண்டைய தமிழகத்து முறை மைக்கு மாருகவும் இருக்கின்றதே என்ற வருத்தமும் அன்றி வேறில்லை. தொல்காப்பியச் செய்யுளியலுக்குப் புத்துயிர் கொடுத்து உலகில் அது மறுமலர்ச்சியொடு புது நடமாடுங் காலம் வரும் ஆயின், போலிப் பாவலர் பெருமை யெல்லாம் கேலிக் கூத்தாய்விடும். உண்மைப் பாவலர் உயர்ச்சி இமயம் போல விளங்கும்.

இக்கட்டுரையில் மட்டும் இப்பாடலில் உள்ள யாப்பிலக்கண அமைதியைக் குறித்துச் சிறிது எழுதுங் கடப்பாடு உண்டாய் விட்டது. யாப்பருங் கலத்திலும் யாப்பருங்கலக் காரிகையிலும் நாலசைச்சீர் பதினறுகொண்டு, அப்பதினறும் முதற்கண் வரும் வஞ்சிப்பா ஒன்று உதாரணமாகக் காட்டப்பட்டது. அஃது "அங் கண் வானத்தமர் அரசரும்" எனத் தொடங்கித் "திருவடி பரவு தும் சித்திபெறற் பொருட்டே" என அடங்கும் பாட்டு. ஆசிரியர் குமரகுருபரரும் அதுபோல இவ்வஞ்சிப் பாவைப் பாடி யருளினுர்.

"அவை குறளடி வஞ்சியல்ல; சிந்தடி வஞ்சியாக வைப்ப நாலசைச்சீர் அல்லவாம்" (யா. வி. பக். 336) என்பது ஆசிரி யர்க்குத் தெரிந்திருப்பினும் உலகியலை யொட்டி நாலசைச்சீரும் கொண்டு பாடியருளினுர் ஆவார். யாப்பருங்கல விருத்தியின் ஒழிபியலில்,

" அந்தமும் ஆதியும் நடுவும் கூனசை
வந்தன அன்றியும் வந்த வாமெனின்

முந்திய குறளடி மொழிந்த தன்றது
சிந்தென நாலசை சேர்வ தில்லையே''

என்னும் கருத்தையும் பாவலர் அறிந்து கொள்க.

அங்கண் வானத் தென்னும் பாடலில் சீர் நிற்கும் முறைமைக்கும் இச்சிதம்பரச் செய்யுட்கோவையுள் இவ் 'வையமீன்ற' என்னும் பாடலில் சீர் நிற்கும் முறைமைக்கும் சிறிது வேறுபாடுளது.

நாலசைச் சீருள் முன்னீரசைச்சீரும் தேமா, கூவிளம், புளிமா, கருவிளம் ஆக நின்ற முறை, இரண்டனுள்ளும் ஒக்கும். பின்னீரசைச் சீர் நின்றமுறைமட்டும் வேறுபட்டது. யாப்பருங் கலத்துப் பாடலின் முறை, தண்பூ, நறும்பூ, நறுநிழல், தண்ணிழல் ஆகும். சிதம்பரச் செய்யுட் கோவையில் இச்செய்யுளில் பின்னிருசீரும் நின்ற முறை, தண்பூ, நறும்பூ, தண்ணிழல் நறுநிழல், ஆகும். அம்முறை வேறுபாடு யாதொரு பயனையும் விளைப்பதில்லை எனப் பொருட்படுத்தாமல் விடலாம் பயனோக்கி வாழும் பாவலர். பூவும் நிழலும் எங்கு அமையினும் கேடில்லை எனினும், தண்பூநறும்பூ என்ற கிரமம் தண்ணிழல் நறுநிழல் என்றால் தான் அமையும். அமையாதேல் அது கிரமபங்கம் (முறைக்கேடு) என்ற குற்றத்தின் பாற்படும். அம் முறைக்கேடு என்ற குற்றம் ''வண்மையில்லையோர் வறுமையின்மையால்'' என முதலும் கம்பர் பாட்டிலும் உளது.

இச் சிதம்பரச் செய்யுட் கோவையிலும் இவ்வஞ்சிப்பாவில் இரண்டாவது அடிக்கண், 'கொய்துழாய் மவுலிக் குணக்கொண்டலும்' என்று காணப்படுகின்றது. அது, பாடியவர்க்கு ஒரு மாசுண்டாக்கும். ஆசிரியர் அவ்வாறு பாடியருளினர் அல்லர். அவர் கொய்துழாய்மௌலி என்றே பாடிய உண்மை அதன் இலக்கணம் உணர்ந்தார் அனைவர்க்கும் எளிதின் விளங்கும். 'மௌலி' என்றால் தண்பூ (நேர்நேர்) என்றாகும். 'மவுலி' என்றால் நறும்பூ (நிரைநேர்) என்றாகும். இங்குப் பொருணோக்கம் கொள்ளலாகாது. அசை வேறு பாட்டையே நோக்குதல் வேண்டும். பொருளொருமை கொண்டு, மௌலியும் மவுலியும் ஒன்றே என்பது புலமைக்குரிய தன்று. கயிலை கைலை என்று இரு வேறு திறமும் தமிழ் நூல்களுள் உண்டு. கைலை என்பது பிழையே. கயிலை என்பதே

திருமுறையாசிரியர் அனைவரும் கொண்ட உண்மைத் திறம். 'கயிலை நாதன் கறுத்தவர் முப்புரம்' எனத் தொடங்கும் திருக் குறுந்தொகையிற் கைலை என்று அமையுமோ? திருக்கோழம் பத்துத் திருக்குறுந்தொகை முதலியவற்றிலும் இது காண்க. 6, 51, 1, 6, 53, 11, 6, 71, 11, பார்க்க. திருக்கைலாய பரம்பரை என்றெழுதுவது குற்றமே. திருக்கயிலாய பரம்பரை என்றே எழுதி வரல் வேண்டும். 'பௌதிகம்' என்பது, நிரை முதல் அசையாக வேண்டுங்கால் 'பவுதிகம்' என்றுளும் பாவலர் வழக்கத்தைப் போல்வது இம்மௌலி மவுலி என்னும் இருதிற வழக்கமும்.

குணக்கொண்டலும் எனின், 'கொய்துழாய் மவுலிக்' பையர வரசும் கூவிள நறும்பூ என்னும் வாய்பாட்டிற்குதாரணம் ஆகும். ஆயின், பணிந்திறைஞ்ச" என்று ஆறுவதடியில் வரும் உதாரணம் 'கூவிள நறும்பூ' என்னும் வாய்ப்பாட்டிற்குரியது. அதனால், 'தேமாந்தண்பூ'என்னுஞ் சீர்க்கு உதாரணம் இல்லை என்னும் குற்றமும் ஒன்றே. ஈரிடத்தும் நின்று கூறியது கூறல் என்னும் குற்றமும் சாரும். இக் குற்றம் ஆசிரியர் குமரகுருபர முனிவரர் அருகிலும் சாராது என்னும் உண்மையை உணர்த்தற் பொருட்டே இவ்வளவு எழுத நேர்ந்தது. இங்கே **'கொய்துழாய் மௌலி'** என்று திருத்திக் கொள்வது அறிஞர் கடன்.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில், முப்பத்து முக்கோடி தேவர்கள் துதியில் (காப்புப் பருவம் 10.) எட்டடியினும் 'முப் பத்து முக்கோடி' என்னுந் தொடரின் ஓசைக்கு ஒப்பவைத்து ஐந்தாவதடியில் 'பற்பப் பதத்தானே' என்று அமைத்த நிலையைக் கண்டிலம். 'பற்பமாது' (மீனுட்சி. பிள்ளைத். 4) 'பற்பத்துள் மேவவும்' (ஷை 13) 'கருணைவதன பற்பமும்' (முத்துக்குமார சுவாமி பிள்ளைத். முத்தப் 10) என்று பிற இடங்களில் வருதலை யும் நோக்கித் திருத்திக் கொள்வது அறிவுக்கு அழகு. உண் மைப் புலவராயின், இத் திருத்தங்களைச் சிறிதும் வருத்தம் இன்றிப் பொருத்தமென்று கொள்ளும் உவகைப் பெருக்கத்தால் நிருத்தமும் ஆடுவர்.

இனிப் பொருணோக்கத்தில் நுழைவாம். துறவிக்குப் பொருள் நோக்கம் இன்றியமையாததே. அது மெய்ப் பொருள்

நோக்கம் ஆகும். பொய்ப்பொருள் நோக்கம் அன்று. மடம் இருக்கும்வரையில் அதுவும் இருக்கும் அன்றோ?

வையம் ஈன்ற மறைக் கிழவன் படைக்கும் நான்முகன்; கொய்துழாய் மௌலிக் குணக் கொண்டல் காக்கும் திருமால்; தருவார்நீழற்றூர் வேந்தன் இ ந் தி ர ன் (தேவர்க்கு அரசன்); வையம் என்பது உலகிற்குப் பெயர். துழாய் - துளவம். தரு - கற்பக விருக்கம். தார் மாலை எனப்படும் என்பர். கண்ணி, தார், மாலை மூன்றும் வெவ்வேறே. புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தி லும் திருநாவுக்கரசர் திருவாக்கிலும் சேக்கிழார் திருவாக்கிலும் இது தெரியலாகும். வரல்முறை—''வரலாற்று முறைமையின் வாராதார். ''பொய்படும் ஒன்றோ புனைபூணுங் கையறியாப் பேதை வினைமேற் கொளின்'' என்றவாறே (சங்கரநமச்சிவாயர் உரை). தாழ்ந்து - தலைவணங்கி. வாழ்த்து இசைப்ப வாழ்த்துக் களை இசை யொடுபாடி வழிபட. மை - குற்றம். தீர் - தீர்ந்த மைதீர் உணர்வு - பசுபாசஞானம் அற்ற பதிஞானம். 'துகளறு போதம்'. உணர்வினை யுடைய மழவு என்றும் உணர் வினை யுடைய முனிவன் என்றும் இயைத்துக் கொள்ளலாம். மழ முனிவன்—உபமன்னியு முனிவராகிய மழவையுடைய புலிக்கால் முனிவர். 'மழமுனிவன்' என்பது இங்குத் தனிமுறையிற் பொருள் கொள்ள நின்றது. பை-படம். அரவரசு பாம்பிற்கு வேந்தன். ஈண்டுப் பாம்புக்கால் முனிவரைக் குறித்து நின்றது (பதஞ்சலி முனிவர்). முனிவனும் அரசும் பணிந்து இறைஞ்சத் தாண்டவம் புரியும் தில்லை வாணன், வாழ்த்திசைப்பவும் பணிந்திறைஞ்சவும் தாண்டவம் புரியுந் தில்லை வாணன் என்று கொள்க. வாழ்த் திசைப்பார் மூவர், கிழவனும் கொண்டலும் வேந்தனும். பணிந் திறைஞ்சுவார் முனிவனும் அரசும் ஆகிய முனிவர் இருவர். இங்கும் மூவர் ஆக்க மழவைக் கொள்ளலாம்.

தில்லை வாண! நின் திருவடிக்கீழ்ச் சொல்லும் விண்ணப்பம் ஒன்று உளது. இதைச் சொல்லக் கேள். 'மதி' என்பது முன்னிலை யசைச் சொல்லாக கொள்ளப்படுவது. அது முற்காலத்திற் பொருள் பயப்பதொரு சொல்லா யிருந்தே பின் பு அசைச் சொல்லாயிற்று. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியம்.

கமலலோசனன் - தாமரைக் கண்ணன் (திருமால்). கண் படுதல் - கண்ணிமை யிரண்டும் ஒன்று படுதல். கண்படுத்தல் - அவற்றை ஒன்றுபடுத்தும் உறக்கம். அமளி - படுக்கைக்குரிய மெத்தை முதலியவற்றைக் குறித்த வழக்கு. இடத்து நிகழ்ச்சி இடத்திற்காகு பெயர். நின்மருங்கு - உன்பால். ஆதரித்தனை - விரும்பினை. திருமால் படுக்கையாகிய ஆதி சேடனை. (ஆதி சேடன் அவதாரம் ஆகிய பதஞ்சலி முனிவரை). கேழ் - நிறம். செங்கேழ்-செந்நிறம், செந்நிறத்தையும் நறுநுதலையும் உடைய திருமகள். கேழ்நுதலதாக்கினும் நன்றே. அவன் - திருமால். அங்கு - அப்பாற் கடல் (உலகப் பிரசித்தம் ஆதலின் பண்டறி சுட்டுப் பெயர்). அவன் திருமகளொடும் உறைதரும் ஆழிச் சேக்கை. 'அங்கு' என்று ஆழியைச் சுட்டியதால், இங்குச் சேக்கைக்கு அடையாய் நின்றதாகக் கொள்க ஆழியை. ஆழிச் சேக்கை - பாற்கடலாகிய உறைவிடம். சேக்கை - தங்கும் இடம். 'சேக்கை மரன் ஒழியச் சேண் நீங்கு புள்' 'நன்னுரைப் பதிதன்னுள்ளே சேந்தனனே ஐந்து செங்கையனே' என்பவற்றால் 'சேக்கை'என்ற தன்பொருள் இனிது புலப்படும். பின்னது திருநாரையூர்ப் பிள்ளையார் இரட்டைமணி மாலையின் ஈற்றுத் திருப்பாடலில் உள்ளது. இதை யுணர்ந்தாவது அதைத் திருத்திக் கொள்ளலாம். சேக்கையைப் புதல்வனுக்கு அளித்தனை. புலிக்கால் முனிவரன் புதல்வன் - உபமன்னியு முனிவர். 'பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற் கடல் ஈந்த பிரான்' என்றது பிரசித்தம்.

திருமால் அமளியை (பதஞ்சலி முனிவரை) நின்மருங்கு ஆதரித்தனை. (பதஞ்சலி முனிவர் அருகில் இருந்து திருக்கூத்தை வழிபடத் திருவுளங் கொண்டாய்.)

திருமால் சேக்கையை வியாக்கிரபாதர் மகனார் ஆகிய உப மன்னியு முனிவர்க்கு அருளினை. இவ்வாறு அருளித் திருமாலின் படுக்கையையும் கட்டிலையும் அம்மாலுக்கு இல்லாமற் செய்து விட்டனை. அம்மாலோ பாயலும் அமளியும் இன்றி நின்வாயிலில் நெடுங்காலம் பாடுகிடந்தான். பாடுகிடப்பார்க்கு என்ன குறையோ அன்ன குறையைத் தீர்ப்பதே வீடுநல்கும் பீடுடைய தோடுறு செவியன் கடன். உன் அடியார்க்கு வீடு நல்குவதே உனக்குத் தொழிலாகும், அதுவும் பொய்த் தொழில் அன்று.

"பொய்த் தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே........நான்பற்றி நின்ற மெய்த் தேவர் தேவர்க்கே" வீடு நல்கும் மெய்த் தொழில் உரியது. அத் திருவையுடைய மனையை (வீட்டை) அவனுக்கு (அத் திருமாலுக்கு) அளித்திடுதி. மனை - வீடு, வீடு - முக்தி, கிருகம். வீடுநல்குவது – (1) முக்திதானம் (2) கிருகதானம். அவ்விரு பொருளிலும் மனை அளித்தல் (கிருகதானம்) ஈண்டுக் குறிக்கப்பட்டது. இரண்டனையும் துறந்தவனுக்கு வீடு நல்குதலும் குறிப்பால் உணர்த்தி நின்றது.

வஞ்சிப்பா

வையமீன்ற மறைக்கிழவனும்
கொய்துழாய்மௌலிக் குணக்கொண்டலும்
தருவார்நீழற் றூர்வேந்தனும்
வரன்முறைதாழ்ந்து வாழ்த்திசைப்ப
மைதீருணர்வின் மழமுனிவனும்
பையரவரசும் பணிந்திறைஞ்ச
இமயம்பயந்த விளங்கொடியொடும்
தமனியப்பொதுவிற் றுண்டவம்புரி
தில்லைவாணநின் றிருவடிக்கீழ்ச்
சொல்லுவதொன்றிது சொலக்கேண்மதி
கமலலோசனன் கண்படுக்கும்
அமளியைநின்மருங் காதரித்தனை
செங்கேழ்நறுநுதற் றிருமகளோடும்
அங்கவனுறைதரு மாழிச்சேக்கையைப்
புலிக்கான்முனிவரன் புதல்வனுக்கு
நலத்தகுகருணையி னயந்தளித்தனை, அவன்

அதனால்

பாயலு மமளியு மின்றி மன்றநின்
வாயிலி னெடுநாள் வைகின னணையொடும்
அத்திரு மனையவற் களித்திநின்
மெய்த்தொழி லன்றே, வீடு நல்குவதே.

(தொடரும்)

நீதிநெறி விளக்கம்

உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்*

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

[மலர் 14. இதழ் 11-ன் தொடர்ச்சி]

நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர்—முன்னைத்தம்
ஊழ்வலி உன்னிப் பழிநாணி உள்ளுடைவார்
தீய செயினும் சில.

முன்னைப் பிறவிகளில் தாம் செய்த ஊழ்வினையின் வலிமையால் தீய செயல்கள் சிலவற்றைச் செய்வார்களாயினும், அந்தப் பழிக்கு நாணி உள்ளுடைந்து வருந்துபவர்கள் நன்மக்களேயாவார்கள். நேர்மை நாக்கிலே தழும்பேறி யிருக்க நாள் தோறும் செந்நெறியிலே செல்லுபவர்களைவிட இவர்கள் கீழானவர்களல்லர்.

Genuine Repentance

Those who repent and shudder within themselves, even for the smallest evil, committed by them unknowingly under the force of destiny and at the thought of consequent shame and reproach, are certainly in no way inferior to those who tread, unswerwingly, every day, in the path of virtue, gaining at the same time reiterated approbation from the wise. **76**

பிறன்வரை நின்றுள் கடைத்தலைச் சேறல்
அறனன்றே யாயினும் ஆக—சிறுவரையும்

---

* Translated by: Sri P. Mutharasu M. A., B. T., Head of the Tamil Department, Sri K. G. S. Arts College, Arulnandi Nagar.

நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே
மெய்ந்நடுங்க உள்நடுங்கும் நோய்.

மற்றொருவனது எல்லைக்குட்பட்டு நிற்பவளாகிய மங்கை யினிடத்து இன்பத்தை விரும்பி அவளது வீட்டு வாயிலைச் சென்று சேருதல் அறமாக மாட்டாது. அங்ஙனம் அது அறமா யினும் ஆகட்டும். சிறிதாவது நல்ல இன்பத்தைத் தருவதா யிருந்தாலும் அதை மேற்கொள்க. அச்செயலால் வருவது இன்ப மன்று. வேறு எதுவோ எனின் உடல் நடுங்க உள்ளம் நடுங்கு கின்ற ஒரு நோயே யாகும்.

The evil of Adultery

It is certainly not a virtue to wish for the hand of a neighbour's wife. Such an evil may be tolerable if it gives him, at least, a moment's pleasure. It is surely not so, but only gives him the disease that torments both his body and his mind. 77

கருமம் சிதையாமே கல்வி கெடாமே
தருமமும் தாழ்வு படாமே—பெரிதுந்தம்
இன்னலமும் குன்றாமே ஏரிளங் கொம்பன்னார்
நன்னலம் துய்த்தல் நலம்.

தாம் செய்யும் தொழில்கள் சிதைவு படாமலும் கற்ற கல்வி கேடடையாமலும் அறநெறி குறைவடையாமலும் பெரிய இல் வாழ்க்கை நலம் குன்றிவிடாமலும் அழகிய இளங்கொம்பு போன்ற தமது மனைவியரிடம் நல்ல இன்பத்தை நுகர்தல் நன்மை யாகும்.

Proper Conjugal Happiness

It is good for a man to enjoy the charms of his beautiful young wife, if it would be, without prejudice to his business, learning, virtuous deeds and without detriment to his youthful vigour and household duties. 78

கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமும் ஓம்பார்
களவொன்றோ ஏனையவும் செய்வார்—பழியோடு

பாவமி∴ தென்னுர் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார்.

காமத்திஞலே பற்றப்பட்டவர்கள் கொலை செய்வதற்கு அஞ்சமாட்டார்கள். பொய் சொல்லுவதற்கு வெட்கப்பட மாட்டார்கள். மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளமாட்டார்கள். களவுத் தொழில் ஒன்று மட்டுந்தானே? மற்றைத் தீத்தொழில் களையும் செய்வார்கள். பழியும் பாவமும் கூடியது இச் செய லென்று எண்ண மாட்டார்கள். அதனுல் வேறு எதுதான் செய்ய மாட்டார்கள்?

The evils of lust

Those who have fallen a prey to lust will never fear murder; never be ashamed of falsehood; and never care to preserve their reputation. Why, will they stop short with committing theft only? No, they will not hesitate to indulge in all sorts of vicious deeds. What will they not do, who hold that being lustful is not a sin coupled with infamy? 79

திருவினும் நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறன்மனைக்கே பீடழிந்து நிற்பர்—நறுவிய
வாயின வேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர்.

வாயிலே உள்ள இரைப்பொருள் நல்ல சுவையுடையன வாயினும் அவற்றை உமிழ்ந்து விட்டுக் கெட்ட சுவையுடைய பொருள்களைத் தின்னுகின்ற கொடிய விலங்குகளை ஒத்த சிலர், தமது மனைவி திருமகளைவிட அழகுடையவளாக இருந்தாலும் அவளை விட்டு விட்டுப் பிறரது மனைவிமார்களை நாடிப் பெருமை யிழந்து நிற்பார்கள்.

The beastly men

Though the wife is more charming than Lakshmi, the Goddess of Beauty, there are some who degrade themselves by hankering after their neighbours' wives. They are like the foolish beasts that spit out the delicious food in their mouths and be after bitter ones. 80

(தொடரும்)

பாரதி சபதம்—
பாஞ்சாலி சபதம்

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
சரபோசி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்.

விண்ணகத்து விளங்கும் இருசுடர்போல், வர கவியின் இரு கண்களாகத் திகழ்பவை கண்ணனும் பெண்மையும்; கண்ணனையும் பெண்ணையும் தம் இரு கண்களாகக் கருதினார் பாரதியார். பாரதியின் உள்ளம் தமிழ்; உயிர் தேசீயம்; நாடின்றி மொழி சிறவாது, மொழியின்றி நாடு சீர் பெறாது. தேசீயம் பாட வந்த தமிழ்க்கவி; தமிழ் தழைத்திடத் தோன்றிய தேசியக்கவி பாரதி என்றால் அஃது எத்துணையும் மிகையாகாது. கண்ணன், பெண்மை, தமிழ், நாடு இவை நான்கும் இணைந்த பெரு உருவே பாரதியின் திருவுரு.

தம் தமிழ்த்திறத்தால் நாட்டுப்பற்றை ஊட்டினார்; கண்ணன் புகழ் பாடினார்; பெண்ணின் பெருமை பேசினார். இம் மூன்றும் இவருடைய கவிதைகளில் ஆழ்ந்து அகழ்ந்து நிற்றலை அக்கவிகளைக் கற்றுணர்ந்தோர் அறிவர். கண்ணனும் பெண்மையும் கண்கள்; தேசீயம் உயிர்நிலை. இம்மூன்றையும் தனித்தனியே பாடிப்போந்த பாரதிக்கு, மூன்றையும் இணைத்துப் பாடும் வாய்ப்பு கிடைத்தது – அல்ல, வாய்ப்பு பாரதக் கதையில் இருப்பது தெரிந்தது.

எனவேதான், அக்கதையில் தமக்கேற்ற இடமான தக்க பகுதியை எடுத்து எழில்பட யாத்துச் சென்றார். அங்கே

பாஞ்சாலி வருகிறாள் – பெண்ணமையறம் காட்டவும், அறமறம் சுட்டவும் திறமுடையளாகத் தீட்டப்படுகின்றாள். திக்கற்ற பெண்ணுக்குத் தக்க தருணத்தில் தகுந்த துணையாக வந்தமைகின்றான் கண்ணன். இவ்விரு நிலைகட்கிடையே, பெருநிலையாக பாரதியின் தேசீயம் பளிச்சிடுகிறது. தாமும் தம்மை மீறி-மறந்து பேசுவதோடு, பாத்திரங்களின் வாயிலாகவும் தம் நாட்டுத் துடிப்பைக் காட்டுகின்றார் பாரதி.

பாரதக் கதையின் பாங்கான இடத்தையெடுத்துப் பக்குவமாகப் பாடிவிட்டார் பாரதி என்பதில் இல்லை "பாஞ்சாலி சபத"த்தின் பெருமை! விறுவிறுப்பான நடையில், வீறு ஏறுந் தமிழால் அக் கதை நிகழ்ச்சியினை நயம்படவும், நலம் பெறவும் யாத்துள்ளார் என்பதனால் இல்லை அதற்கு ஏற்றம். அங்கே அக்கதையினூடே நெளிந்தோடும் நாட்டுணர்வும், அதன் இரு மருங்காக இணைந்து நிற்கும் பெண்மையும் கண்ணனும் ஆக இவற்றின் கூட்டுச் சுவையே–உணர்வே–துடிப்பே, "பாஞ்சாலி சபதம்". நெஞ்சையள்ளும் செஞ்சொல் பனுவலாக–விஞ்சு தமிழ் கொஞ்சும் வீரத் தமிழ்க் காவியமாக இலங்குதற்குரிய ஏது வெனலாம்.

பெண்மையும் கண்ணனும் பாஞ்சாலியில் அமையுமாற்றினைப் பின்னர் காண்போம். இவண், இதனூடே இன் தமிழ்க் கவியின் இதயப்பாங்கு இணைந்து நிறைந்து செல்லும் இயல்பும், தேசீயத் துடிப்புப் பிணைந்து மறைந்து செல்லும் பெற்றியும் காண்பாம், பாஞ்சாலி சபதமெனும் இலக்கியத்தில், பாரத அரசியல் பேசுகின்றான் பைந்தமிழ்ச் சாரதி பாரதி!

பாஞ்சாலி சபதம் காட்சியளவில், பாரதக் கதையின் ஒரு பகுதி ஓதும் உணர்ச்சிக் காவியமாகத் தோன்றிடினும், உண்மையில் அஃதொரு "தேசீயத் திருக்காப்பியம்" என்றே இயம்புமாறுளது. தோற்றத்திலே அது பாஞ்சாலி கதை, துடிப்பிலே அது "பாரதத் தாயின் துயர்க் கவிதை"; பார்வையிலே ஏற்றமிகு பெண்ணின் எழிற்பாட்டு, பண்பிலே 'இந்தியத் தாயின் இன்னல் கூறும் எழிலோவியம்.' இதனை ஆழ்ந்து நோக்கின் அறியலாம்; தேசிய உணர்வோடு காணின் தெளியலாம்.

உற்று நோக்கின் இஃதோர் ஒட்டுவமை உள்ளுறைச் சபதமே (Allegory) என்று கருதுமாறு உளது. [1]பாஞ்சாலி படும் துயரில் நம் பாரத் தாயின் துயரினைக் காணலாம்; அவள் படும் இன்னலில் இந்தியத் தாயின் இடும்பையினை அறியலாம். துகிலுரிதல் சருக்கத்தில் உரிமை இழந்து அலமந்து உழலும் பாரதத் தாய் காட்டப்படுகின்றாள்; சபதச் சருக்கத்தில் இந்தியத் தாயின் விடுதலை சுட்டப்படுகின்றது. பாஞ்சாலி துயர்கண்டு மக்களும், அவையினரும் வாளாவிருப்பது, பாரத அன்னையின் துயர் துடைக்காது இனிதிருக்கும் பாரத மக்களையும் பாரதப் புதல்வர்களையும் நினைவூட்டும். கௌரவர்கள் வெள்ளையர்களையும் அவர்கள் இழைக்கும் கொடுமைகள் அன்னிய ஆதிக்கத்தால் நம் பாரத நாடுபட்ட பாட்டினையும் காட்டும். கண்ணன் துணை நின்றது காந்தி போன்றாரின் உறுதுணை உணர்த்துவதாகலாம். இனி நால்வரின் சூளுரையில் நாம் எடுக்க வேண்டிய உறுதியும் (Pledge), பாஞ்சாலி சபதத்தில் பாரதத் தாயின் பெருஞ்சினப் பேராற்றலும் அமைந்தொளிர்தல் தெளியலாம்.

'கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்
காவியம் பலநீண்டன கட்டென்பார்'.

என்பதற்கிணங்க, கதை பொதி கவிதையாகக் குயிற் பாட்டைப் படைத்திட்டார். அதேபோல், காவியமாக பாரதக் கதையைப் பாஞ்சாலி சபதமாக வடித்தெடுத்தார்; இதில் என்ன மறை பொருள் இருக்கிறது? என எண்ணத் தோற்றும். கதைக்காகக் குயிற் பாட்டைத் தந்ததுபோல், தாமே ஒரு காவியம் படைத்திருக்கலாமே! அங்ஙனமின்றித் தம்நெஞ்சத் துடிப்பினை-தேசிய

---

[1]'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசத்தின் துயரத்தையும் அதைக் களைய மக்கள் ஏற்க வேண்டிய உறுதியையும் குறிப்பாக உணர்த்த பாஞ்சாலி கதையை ஒரு குறியீடாகவும் பாரதி பயன்படுத்துகிறாரோ என்று எண்ணவும் இடமிருக்கிறது.' —Prof. A. SRINIVASA RAGHAVAN.

His 'Panchali Sapatha' was pitched as an allegory of the vow of the Indian to liquidate the foreign rule.

—KAVITA RATNAM Smthy HAKI VALAM.

'தேச விடுதலையைப் புதை பொருளாகக் கொண்டு இந்நூலை இயற்றியுள்ளார்' பாரதியார் — பீ. ஸ்ரீ.

உணர்வினை வெளிப்படுத்தும் வாய்ப்பாக (to give vent to his imner-most feelings that is pressing for expression) அமையும் பகுதியை மேற்கொள்ளுவானேன்?

அதிலும், ஏனையோரெல்லாம் இப்பகுதியை, "த்யூத பாவம்" (வியாசர்); "சூதுப் போர்ச் சருக்கம்" (வில்லிபுத்தூரார்); "திரௌபதி மான சம்ரட்சணம்" (பாகவதர்களும் பக்தர்களும்); "சூது துகிலுரிதல்" (நாடகக்காரர்கள்) என ஒவ்வொரு முறையில் தத்தம் கண்ணோட்டத்திற்குத் தகக் கண்டனராக, பாரதி இப்பகுதியைப் "பாஞ்சாலி சபத"மாகப் பாடுவானேன்? பின்னே நிகழவிருக்கும் பாரதப் போருக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது இச்சூதே யாகலின், வில்லி இதனைச் "சூதுப் போர்ச் சருக்கம்" என்றார். கண்ணன் புகழ் உலகறியப் படுவதற்கு அடிப்படையாகலான், திரௌபதி துகில் உரியப் படுவதும் வளர்வதுமான பகுதியை வைணவ பக்தர்கள்" "திரௌபதி மானசம் ரட்சணம்" என்பாராயினர். நாடகத்திற்குக் காட்சி இன்பமே இன்றியமையாதது; அதிலும் காண்போரின் கண்ணைக் கவரவும், கருத்தை ஈர்க்கவும் தக்க சகுனி சூதாடும் காட்சியும், அதன் பயனாகத் தருமன் அனைத்தையும் இழந்து அல்லலுறும் அவலக் காட்சியும் அரசவையில் துச்சாதனன் அன்னையின் துகிலினை உரியும் உளமுருக்கும் காட்சியுமே முக்கிய மானவை; அதிலேதான் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள் நாடகக் காரர்கள். எனவேதான் அவர்கள் "சூது–துகிலுரிதல்" எனப் பெயரிடலாயினர்.

ஆனால் பாரதிக்கோ சூது மட்டுமே முக்கியமில்லை; துகிலுரிதலே இன்றியமையாததுமல்ல; இவற்றிலும் மேலான சபதமே முக்கியம். எனவேதான் பாண்டவரும், கௌரவரும் சூதாடும் பகுதியையும், துரியோதனன் அவையில் திரௌபதி தீது இழைக்கப்படும் பகுதியையும் இணைத்துத் தம்கருத்தைப் பெய்து தேசியத்தை வைத்துப் "பாஞ்சாலி சபதம்" என்னும் நாடகக் காவியமாகச் செய்திட்டார். இதனை நன்குணரின் பாரதி தம் சபதத்திலே புதைத்து வைத்த புதையல் – உட்பொருள், வைரமென மின்னிடுவது தெளியலாம்.

"தண்ணீர் விட்டோவளர்த்தோம் சர்வேசா—இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்"

"என்று தணியுமிந்த சுதந்திர தாகம்".

"வந்தே மாதரம் என்போம்—இந்த
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்"

...........''எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்!''

"வேதனைகள் இனிவேண்டா விடுதலையோ திண்ணமே"

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்றெல்லாம் கோழையும் குதித்தெழுந்து வீறு கொள்ளும் வண்ணம் வீரக்கனல் மூட்டிய, தேசீயத் தீ யூட்டிய பாரதி—"என் பெழுந் துலறிய புன்முதியோனையும் வன்மையுறச் செய்யும்" ஆற்றல்சால் கவியாத்த பாரதி, புதுப்புது வகையில் தேசீயத் துடிப்பினை ஊட்டிய தோடு, மக்கள் உள்ளங்களிலெல்லாம் ஊறி உருக்கிய பாரதக் கதை கொண்டு நாட்டுணர்வை ஊட்ட முனைந்தார். கருத்தையே சொல்லியும் பாடியும் கொண்டிருப்பதைவிடக் கண்முன்னே கொணர்ந்து நிறுத்தும் வகையில் பாஞ்சாலி உருவில் பாரத அன்னையை நம் கண் முன்னர் கொண்டு வந்து நிறுத்துகிறார். ஒன்றைக் கேட்பதைவிடப் பார்ப்பதில் தானே உள்ளம் உடனே ஒன்றுகிறது—நிறையுணர்வு பெறுகிறது—செயல்படு சிந்தை அமைகிறது; இவ்வுண்மையை உணர்ந்தே, மனக்கண் முன் நின்று நிலைக்கும் வண்ணம் கொடுமை மிகு கௌரவர்களைக் காட்டுகின்றார்; கட்டுண்ட பாண்டவர்களையும் பார்த்திடச் செய்கிறார். நம் கண்முன்னேயே (under our very nose) நம் பாரத அன்னை நம் தாய் அலமந்து அரற்றுவதை நாம் காணுமாறு செய்கின்றார். இச்செயல் கண்டு எவருள்ளம்தான் மெழுகென உருகாது? இரும்பென உறுதி பூணாது? வைரமென வீறு கொள்ளாது?

ஒருவன் கொலையுண்ட செய்தி கேட்டு நாமடையும் துயரை விட, நேரே அக்காட்சியைக் காண்பதால் நாம் அடையும்

"அவலம்" பெரிது; அஃது இறக்கும்வரை மறவா நிகழ்ச்சியாக இதயத்தில் அமைந்து விடுமே! அம்முறையில்தான் நம் பாரத அன்னை அடிமைத்தளையில் அல்லலுறுவதனைப் பாரீர். அவள் துயர் போக்க வாரீர்! என்றெல்லாம் விண்ணதிரக் கதறுவதைக் காட்டிலும், மனக்கண் முன் என்றும் மாறா இதய முருக்கும் ஒரு காட்சியை நிலைபெறச் செய்துவிட்டால், அஃதொன்றே கற்றோரையும் மற்றோரையும் பற்றிப் பிணித்து உலுக்கி ஒரு பெரும் செயல் புரிந்திடச் செய்யும்; சிந்திக்கச் செய்திடும்; உணரவைக்கும். இதனைத் தான் செய்தான் பாரதி!

இதனை எண்ணும்போது, இளசைக்கவி பாஞ்சாலி சபதம் பாடினார் என்பதைவிட, "பாரதத் தாயின் சபதம்" பாடினார் என்றே இயம்புதல் சாலும். அங்கே வீமனும் பிறரும் வஞ்சினம் சாற்றினர் என்பதைவிட, பாரதியே சபதம் சாற்றினானே என்று எண்ணுதல் இயலும். அங்ஙனம் அமைந்துளது அவனது சபத அமைதியும், சாற்றரிய சீற்றமும்! கதைப்போக்கும், காப்பிய நோக்கும். நிகழ்ச்சி அமைப்பும், நீள்சபத அமைதியுமே இதனை இனிதுணர்த்தும்.

பாண்டவர்களைச் சூதுக்கு அழைத்து வருமாறு திருதராட்டிரன் விதுரரிடம் கூறியதும், அவர்

'போச்சுது! போச்சுது பாரத நாடு'

என்று வருந்தி, வழியினிடையே நாட்டின் வளங்கள் நோக்கி நெஞ்சம் விம்முகின்றார். யார்? விதுரரா? நாடகத்தில் என்னமோ விதுரர்தான்! ஆனால் உண்மையில் அங்கே பாரதியே காட்சியளிக்கிறார். அங்கே குருநாடு இயம்பப்படுவதாக எண்ணல் வேண்டா; பாரத பூமியே பாராட்டப் பெறுகிறது. தான் பிறந்த நாட்டின் ஏற்றம் கண்ட எவனும் பெருமிதமும் பற்றும் கொண்டு, அந்நாட்டுக்கு ஊறு நேரின் உயிரையும் கொடுக்க முனைவானன்றோ? அந்நிலையில்தான் அமரகவியும் தமக்குக் கிடைத்த இவ்வாய்ப்பினை நழுவ விடாது,[1] நாட்டுப் பற்றினை நம் நரம்புக் கால்கள்தொறும் ஏற்றிடச் செய்கிறார்.

---

[1] He never missed a single opportunity in indulging in the praise of his country.

'பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு!
பெண்களெல்லாம் அரம்பையர்போ லொளிரும் நாடு!
வீரமொடு மெய்ஞ்ஞானம் தவங்கள் கல்வி
வேள்வியெனும் இவையெல்லாம் விளங்கு நாடு!
சோரமுதற் புன்மையெதும் தோன்ரு நாடு!
தொல்லுலகின் முடிமணிபோல் தோன்று நாடு!'

என வான்புகழ் ஓதி, இந்நாடு அழிந்தொழிய இருப்பதற்காக இரங்குகின்ருர். இன்னும் தருமன் வாயிலாக,

'பின்னை யென்னுயிர்ப் பாரத நாட்டில்
பீடை செய்யுங் கலியை யழைப்பார்'

என்றும், "தன்னுயிர் பாரத நாடு" எனவும் நவில்கின்ருர்.

'ஐயகோ! நங்கள் பாரத நாட்டில்
அறிவிலார் அறப்பற்று மிக்குள்ளோர்
நொய்யராகி யழிந்தவர் கோடி'

எனச் செப்பச் செய்யுமாற்ருன், "நங்கள் பா ர த நாட்டில்" எனத் தன்பற்றினை வெளியிடுகின்ருர்.

இங்ஙனம் பல்லாற்ருன் பாரத நாட்டின் – பாருக்குள்ளே நல்ல நாடாம் பாரத நாட்டின் பெற்றியும், அதனிடத்து நாம் கொள்ளவேண்டிய பரிவும் கூறித் தேசியக் கனல்மூட்டுகின்ருன் தமிழ்க் கவி.

"நாடிழக்கவில்லை தருமா! நாட்டை வைத்தாடு" எனச் சகுனி செப்பியதும், விதுரர் வெஞ்சினம் கொண்டு பேசுகின்ருர்; அங்கே நாட்டை அடிமைப் படுத்தும் புன்மைபற்றிய பாரதியின் வெறுப்பு பளிச்சிடுகின்றது.

'ஐயகோ! இதை யாதெனச் சொல்வோம்!
அரசரானவர் செய்குவ தொன்ரோ?
மெய்யதாக வோர் மண்டலத் தாட்சி
வென்று சூதினில் ஆளுங் கருத்தோ?
வையம் இஃது பொறுத்திடு மோ?மேல்
வான்பொறுத் திடுமோ? பழி மக்காள்!
துய்ய சீர்த்தி மதிக்குல மோநாம்?'

எள்ளுகின்றார். 'தூ'வென்று விதுரர் மொழியில் பாரதியின் வெகுளி முண்டு நிற்றல் காண்க.

நாட்டையே பணயப் பொருளாக வைத்துச் சூதாடும் தருமன் செய்கை கண்டு, தாம் கதை ஓதி வருவதும் மறந்து தம் கூற்றாகச் சீற்றமுடன் கவிதை பாடுகின்றார் பாருங்கள்:

'கோயிற் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன்—வீட்டை
வைத்து இழத்தல் போலும்,
ஆயிரங்க ளான—நீதி
அவையு ணர்ந்த தருமன்,
தேயம் வைத்தி ழந்தான்—'சீச்சி'
சிறியர் செய்கை செய்தான்'

என்கிறார். எத்தனை வெகுளி? எத்துணை வன்மை? பொறுமையின் உறைவிடமென எல்லோராலும் ஏத்தப்பட்ட தருமனைத் தருமன் என்றும் பாராமல், "சீச்சி சிறியர் செய்கை செய்தான்" என்கிறார். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே" எனத் தாயையும், தாய்த்திரு நாட்டையும் ஒப்பாகக் கருதும் பாரதிக்குத் தாயகத்தை வைத்திழந்த தன்மை மிக்க வெகுளியை உண்டாக்கி விட்டது.

தன் ஆட்சியில் (முடியாட்சியில்) இருந்ததாலன்றோ மக்களுக்குரிய நாட்டைத் தன் சொந்த உடமையாகக் கருதி சூதுப் பொருளாக்கினான் தருமன்; அங்ஙனமின்றிக் குடியாட்சியில் தனியொருவனே அரசனாயினும் நாட்டைச் சூதாட்டப் பொருளாக ஆக்கிட முடியுமா வென்றெண்ணிக் குமுறி, குமைந்து, முடியாட்சியின் படிறும் கொடுமையும் பகர்கின்றார் பாருங்கள்;

'நாட்டு மாந்த ரெல்லாம்—தம்போல்
நரர்க ளென்று கருதார்;
ஆட்டு மந்தை யாமென்—றுலகை
அரச ரெண்ணி விட்டார்,

காட்டும் உண்மை நூல்கள்—பலதாங்
காட்டி ஞர்க ளேனும்,
நாட்டு ராஜ நீதி—மனிதர்
நன்கு செய்ய வில்லை'.

என ஆணித்தரமாக அறைகின்றார். இங்கே தருமன் மட்டு மல்ல; அவனை வாயிலாகக் கொண்டு ஏகாதிபத்தியக் கொடுங் கோன்மையையே வன்மையாகத் தாக்குகின்றார். இவண் அத்தினபுரத்தை மட்டும் மனதில் இருத்துதற்கில்லை; உலகையே உள்ளத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவேதான்,

'ஓரஞ் செய்தி டாமே—தருமத்
துறுதி கொன்றி டாமே,
சோரஞ் செய்தி டாமே—பிறரைத்
துயரில் வீழ்த்தி டாமே,
ஊரை யாளு முறைமை—உலகில்
ஓர்புறத்து மில்லை.'

என்று உளம் நோகின்றார். உலகையே ஒரு கண்ணோட்டம் விட்டு அலசிப் பார்த்து!

பாஞ்சாலி சபதம் பாரதி சபதமே என்பதற்கு இன்னுமோர் எடுத்துக்காட்டு; தருமன் பாஞ்சாலியைப் பணயப் பொருளாக வைத்துச் சூதாடிய கொடுமை பொறுக்காது பொங்கி எழுந்தான் வீமன்; அங்கே பாரத அன்னையை மனதில் எண்ணிய பாரதி யின் வெகுளி தலைகாட்டுதல் காணலாம்;

'இருபகடை என்றாய்—ஐயகோ!
இவர்க் கடிமை யென்றாய்!
இது பொறுப்ப தில்லை—தம்பி!
எரிதழல் கொண்டுவா!
கதிரை வைத்தி ழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்.'

என்பதில் பொருளும் சொல்லும் பழையதாகலாம்; ஆனால் பொருளோடு பொருந்திய தொனியும், சொல்லோடு அமைந்த துடிப்பும் அங்கே சீற்றமுற்றுச் சாற்றியது வீமனல்லன், வர கவியே என்பது விளங்கும்.

இன்னும், துகிலுரியப்படும் நிலையில் பாஞ்சாலி அஞ்சும் நிலையினை நவில வந்த நம் பாரதி,

"அன்னை துகிலினை மன்றிடை உரிதலுற்றான்"

"அன்னை உலகத்தை மறந்தாள் ஒருமையுற்றாள்".

என "அன்னையை – பாரத அன்னையை" நினைவூட்டுகின்றார். வீமனும், அர்ச்சுனனும் சபதம் சாற்றுவதில் உள்ள கருத்து, யாவருமறிந்த ஒன்றே யாயினும்! அங்கே வீமார்ச்சுனர் வடிவில் பாரதியே "தம் பாரதத் தாய்க்கு நேர்ந்த துயர் துடைக்கச் சூளுரைப்பதாகக் கொள்ள வேண்டியுளது. சொல்லிலே துடிப்பு; சொல்லு முறையில் புதுவேகம். கேட்ட நாம் செய்கை அறியாது அதிர்ந்தே விடுகின்றோம்; அத்தனை வெகுளி அவரது கவியில்!

இறுதியாகப் பாஞ்சாலி சபதம்; இத்தோடு கதை முடிகிறது; அன்னை பராசக்தியின்—பாரத தேவியின் சூளோடு முடிக்கிறார் தம் காவியத்தை பாரதி!

படித்தோரும், பார்த்தோரும்; பாஞ்சாலி சபதம் கேட்டுப் பேருணர்வு கொள்ளு முறையில்- மீப்பேரளவு பெருந்துடிப்பு கொண்டு அன்னை துயர் துடைக்க–பாரதத்தாயின் இன்னல் போக்க முனைந்திடச் செய்யும் அளவுக்கு முறுக்கேற்றும்; குருதியெல்லாம் கொதித்திடச் செய்யும். அச் சூளோடு முடிக்கிறார் அமரகவி தம் அமர காவியத்தை!

"பார்க்கின்ற மலரூடும் நீயே இருத்தி" என இறைவனைக் கண்ட தாயுமானார் போல், "நோக்கிய வெல்லாம் அவையே போல்" எனும் தன்மைபோல், பாரதிக்கு எங்கும் எதிலும் பாரதத் தாயின் துயரே காட்சியளித்து; அவள் துயர் துடைத்திடப் பல்லாற்றான் முயன்றார்; இலக்கியத்திலும் அரசியல் 'பிரச்சாரம்' (Propaganda).

இதற்கிடையில் 'இம்' என்றால் சிறைவாசம், 'ஏன்' என்றால் வனவாசம் என்றிருந்த வெள்ளையர்தம் அடக்கு முறைக்கு ஆட்பட்டு, புதுவையைப் புகலிடமாகக் கொண்டு தாய் நாட்டன்பை வெளியிட்டார். சொந்த நாட்டு விடுதலை பற்றிப் பேசுவது கூட 'தேசத் துரோக'மாகக் கருதிய வெள்ளைய ராட்சியில் வெளிப்படையாகப் பேசுவதோடு இலக்கியத்தின் மூலம் மறை

மூலமாகத் தம் குறிக்கோளை வெளியிட வேண்டிய நிலையும் ஏற்பட்டது பாரதிக்கு—அதன் விளைவே போலும் பாஞ்சாலி சபதம்!.

அன்றியும் கவிஞர் தாம் கண்ட கனவு நனவாகாவிடில் தன் மன நிறைவுக்காக வேனும், கற்பனையில் நிறைவேறுவதாகக் கவிதை சமைப்பது உண்டல்லவா? அம்முறையில் இந்தியத் தாயின் தளை அறுபட வேண்டும்; அன்னியர் ஆதிக்கம் ஒழிய வேண்டும்; அதற்கு முப்பது கோடி மக்களும் முனைந்து நிற்க வேண்டும் எனும் தம் எண்ணம் எதிர்பார்த்த அளவு ஈடேருது போகவே, இலக்கியத்திலேனும் தம் துடிப்பு தணிதற்கேற்ப, அதற்குகந்த ஒரு கதை நிகழ்ச்சியின் வாயிலாகத் தம் உணர்ச்சிக்கு உருக் கொடுத்தார் பாரதியார்.

இன்னும் ஒன்றறிதல் ஒல்லும்; ஒன்றை நேர் முகமாகத் திறந்து கூறுதலைவிட, இலை மறைகாய்போல் மறைத்துக் கூறுதல் மாண்புடைத்து; பயனுடைத்து. அவ்வகையில் பாரத அன்னைபடும் துயரினை அடுக்கிக் கூறி, அது துடைக்க 'மக்களே! அனைவரும் உறுதிகொள்ளுங்கள்!' என்று அறிவித்தலைக்காட்டிலும் இலக்கியக் கதையினை இயம்பும் பெயரில், இந்நாட்டரசியல் இயம்பி, எல்லோரும் செயல்பட வேண்டிய இன்றியமையாமையை உணர்த்துவது நல்லது; நிறைந்த பயனையும் தரும். அந்நிலையில் அமைகிறது பாரதி சபதம் என்பதும் இதயத்தில் இருத்துதல் நன்று.

இத்தலைப்பில் கண்டதன் தொகுப்பு: ஒல்லும் வகையெல்லாம் நாட்டுணர்வூட்டும் நம் பாரதி—இயன்ற ஞான்றெல்லாம் பாரதத்தாயின் பெற்றியுணர்த்தும் பாரதி, தம் பார்வையில் பட்ட கருத்திற்கு வந்த பாரதக் கதையில் ஒரு பகுதி, தம் துடிப்பினை வெளியிடும் சிறந்த கருவியாக அமைந்தது கண்டு, அதனைப் பாஞ்சாலி சபதமாக ஆக்கி, அதன் கண் இந்தியத் தாயின் துயரையும், அது துடைக்க நாம் மேற்கொள்ள வேண்டிய உறுதியையும்-ஒருபெருஞ் செயலையும் உயிரோட்டமாக வைத்து அளவிலே சிறிய, ஆனல் ஆற்றலிலே பெரியதோர் காப்பியம் செய்திட்டார், அக்காப்பியம், உருவில் பாஞ்சாலி சபதமேயானுலும், உண்மையில் பாரதியின் சபதமே! பாரதியின் சபதமே பாஞ்சாலி சபதமாகச் சமைந்து நிற்றல் தெளிந்தோம்.

திருவருட் பயன் — தெளிவுரை

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,

(மலர் 14. இதழ் 11-இன் தொடர்ச்சி)

4. அருளது நிலை.

அஃதாவது திருவருளின் தன்மை. இது காறும் மல இருளைப்பற்றிக் கூறினார்; இனி அவ்விருளை நீக்குதற்காம் திருவருளினது தன்மையை இவ்வதிகாரத்தாற் கூறுகின்றா ராதலின் இது மேலையதனோடு இயைபுடைத்தாயிற்று.

ஈண்டு அருளென்பது திருவருளைக் குறிக்கும். இதனையே "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி" என முன்னும் கூறினர்.

31. "அருளின் பெரிய(து) அகிலத்து வேண்டும்
பொருளின் தலைஇலது போல்.

(தெ-ரை) உலகின்கண் உயிர்கள் உடலோடு கூடி வாழுங்கால் இன்றியமையாது — வேண்டப்படுவது பொருட் செல்வத்தினும் வேறு செல்வமில்லை. அதைப் போலவே உயிர்கள் ஈடேறுவதற்கும், திருவருளுக்கு மேலானதொரு செல்வ மில்லையாம்.

திருவருட் செல்வத்திற்கு ஓராற்றான் பொருட் செல்வத்தை இவ்வாசிரியர் ஒப்புமை கூறியவாறே திருவள்ளுவரும், அருட் செல்வத்திற்குப் பொருட் செல்வத்தை ஓராற்றான் ஒப்புமை காட்டுவர்,

“அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு”

என்பது அத்திருக்குறளாகும்.

இனி ‘அகிலத்து வேண்டும் பொருளில் தலையிலது போல்’ என்ற தொடருக்கு, ஒருவற்கு எல்லாப் பொருள்களிலுள்ளும் தான் விரும்பிய பொருளின் மேலாய பொருளில்லாதவாறு போல[1] எனவும்; பூமியின் கண்ணே உண்டாகிய ஆன்மாக்கள் தேக சம்பந்தத்தினால் விரும்பும் பதார்த்தத்துக்கு மேல் ஒரு பொருள் இல்லாதது போல[2] எனவும்; பூமியிலே ஆன்மாக்கள் அவ்வக்காலத்திலே இன்றியமையாததாக விரும்பும் பொருளி லும் மேலான பொருள் இல்லாதவாறு போல[3] எனவும் உரைப் பாரும் உளர்.

நிரம்ப அழகிய தேசிகரும், சிந்தனை யுரைகாரரும் ‘அகிலத் தில் வேண்டும்’ எனப்பாடம் கொள்வர்.

32. பெருக்கம் நுகர்வினை பேரொளியாய் எங்கும்
அருக்கன்என நிற்கும் அருள்.

(தெ-ரை) உலகில் உள்ள உயிரினங்களுக்கு வேண்டிய உணவு முதலியவைகளைக் கொடுத்து, அவற்றை அவை நுகரு மாறு ஒளியைக் கொடுத்து நிற்கும் கதிரவனைப் போலத் திரு வருளும் உயிர்களுக்குரிய வினைகளை அவை தொலைதற்காக வேண்டும் இன்ப துன்பங்களைக் கொடுத்து, அவை அவற்றை நுகருமாறு செய்து அவ்வனுபவத்தால் உயிர்களின் ஆணவ வலியைக் குறைத்து, அவ்வான்மாவின் அறிவொளியை மேலாக விளக்கச் செய்து, எங்கும் நீக்கமற நின்று விளங்குவதாகும்.

அருக்கன் என அருள் நிற்கும் எனக் கூட்டுக. உயிர்களின் எல்லாச் செயல்களுக்கும் அருளே காரணமென்பது இதன் கருத்தாகும்.

---

[1] நிரம்ப அழகிய தேசிகர், [2] சிந்தனையுரை. [3] சு, சிவபாத சுந்தரம்; கா, சு. பிள்ளை.

33. ஊன்அறியா(து) ஒன்றும்உயிர் அறியாது ஒன்றும்இவை
தான்அறியா(து) ஆர்அறிவார் தான்.

(தெ—ரை) உடம்பானது அறிவற்றதாதலின் ஒன்றையும் அறியாது; உயிர் உணர்த்த உணரும் தன்மை வாய்ந்த தன்றித்தானாக எதனையும் அறிய இயலாது ஆதலின் அதுவும் தானாக அறிய இயலாததாகும். இவ்விரண்டும் தாந்தாமும் அறியாமையின் திருவருள் அறிந்து அறிவித்தாலன்றி யார் தான் எதனை அறிய முடியும்? ஒன்றையும் அறிய இயலாது என்பதாம்.

தன்வயம் இல்லாத உயிருக்கு உடம்பையும் கொடுத்து அதற்கு அறியும் ஆற்றலையும் கொடுத்தது திருவருளேயாகும் என்பது இதன் கருத்து. இதனை, 'உருவுடை உயிர்கட்கெல்லாம் நிறைபரன் சன்னிதிக்கென் நீடுணர்வு உதிக்குமன்றே' 'ஒருவனே அனைத்தினாலும் உணர்த்துவன் அருளினாலே' என்றற்றொடக்கத்துத் திருவாக்குகளானும் அறியலாம்.

நிரம்ப அழகிய தேசிகரும், சு. சிவபாத சுந்தரமும், சிந்தனை யுரைக்காரரும் 'ஊன் அறியாது என்றும்' எனப்பாடங் கொள்வர். 'ஒன்றும் இது' எனப் பாடங் கொள்வர் நிரம்ப அழகிய தேசிகரும், சு. சிவபாத சுந்தரமும்.

34. பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்து அருள்உயிர்கள்
மால்ஆழி ஆளும் மறித்து.

(தெ—ரை) உயிர்கள் தாம் வாழுதற்கு இடமாகிய திருவருள் இன்பத்தில் கூடி இன்புறுமல், மயக்கத்தைத் தரும் பிறவிக் கடலிலே அழுந்தித் துன்புறுதல், பாற்கடலில் இருக்கும் மீன்கள் தமக்கே உரித்தான பாலை அருந்தி இன்புறுமல் ஆண்டுள்ள இழிவான பொருள்களை விரும்பித் தின்பது போலாம்.

பாற்கடலில் உள்ள மீன்கள் அருட்கடலில் உள்ள உயிர்களுக்கு உவமையாயிற்று. உயிர்கள் அருட்கடலில் உள்ளன என்பது 'தன் அருள்வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும்படிக்கு இச்சை வைத்து உயிர்க்கு உயிராய்த் தழைத்தது

எது?' என வரும் தாயுமானுர் வாக்கால் நன்கறியலாம். தமக்கு ஆதாரமாகவும் நுகர் பொருளாகவும் பாற்கடல் இருந்தும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளாமல் மீன்கள் அலமருவது போல, உயிர்களும் தமக்கு ஆதாரமாகவும் நுகர்பொருளாகவும் உள்ள திருவருளை அறிந்து இன்புருமல் தமது அறிவு மயக்கத் தால் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றன என்பதாம்.

35. அணுகு துணைஅறியா ஆற்ருேனில் ஐந்தும்
உணர்வை உணரா உயிர்.

(தெ–ரை) உயிரின் வழித்தாய் அறிந்து செயல்பட்டு வருகின்ற ஐம்பொறிகளும், தம்மை யணுகிச் செயல்படுத்தும் உயிரினை அறியமாட்டா. அவ்வாறே உயிரும் திருவருளினுல் செயல்பட்டும் அத்திருவருளை அறியாததாய் உள்ளது என்பதாம்.

ஆறு - வழி. ஆற்ருேன் - பொறிகளின் வாயிலாகப் புலன் களிற் செல்வோன். எனவே இச்சொல் உயிரைக் குறிப்பதாகும் உணர்வு - துணையாக நிற்கும் திருவருள்.

இங்ஙனமன்றித் தனக்குத் துணையாக வருபவனை அறியாத வழிப்போக்கனைப் போலவும்; தம்முடைய காட்சிக்குத் துணையாக நிற்கும் உயிரை அறியாத ஐம்பொறிகளைப் போலவும், உயிர் தனக்குத் துணையாக நிற்கும் திருவருளை உணர்வதில்லை என உரை கூறுவாரும்[1] உளர். இவர்களின் கருத்தின்படி ஆற்ருேன் (வழிப்போக்கன்) ஐந்து (ஐம்பொறிகள்) ஆகிய இரண்டும் உவமைகளாகும்.

(தொடரும்)

---

[1] சு. சிவபாத சுந்தரம்; கா. சுப்பிரமணியம் பிள்ளை.

SAINT APPAR AND HIS HYMNS

அப்பர் சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்

ஆங்கில மொழிபெயர்ப்பு

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

St. Tirunavukkarasu was given poison and it too did not kill him. At the instance of the jains the king sent the royal elephant to trample the saint to death. The saint was not at all disturbed by this. He praised the Grace of the Lord and remained silent. The elephant stood still on reaching him and bowed unto him. Then it turned round and began running towards the jains. They ran helter-skelter.

திருவதிகை வீரட்டானம் பண் காந்தாரம் 4-ஆம் திருமுறை

சுண்ணவெண் சந்தனச்சாந்தும் சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணென் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

"There is nothing that we fear nor is there any that can frighten us; for we are His who besmears Himself with the sacred ash and wears the crescent moon, the tiger's skin and the snakes across the chest; He rides the Bull that protects the devotees and destroys those who don't near the Lord. And He lives on the banks of the kedila (river.)"

The jains were at a loss to know what to do. The king also was very much perturbed and on their suggestion commanded that the saint should be tied to a stone and thrown into the sea. St. Tirunavukkarasu allowed himself to be tied to the stone and thrown into the sea. He was all the time singing the nature of Grace and the Panchakshara mantra. The stone instead of dragging him down to the fathoms of the sea, turned into a float and carried him to the shores. The straps also snapped. The saint reached a port near Triuppadirippuliyur (Pataliputra.)

பொது நமச்சிவாயப்பதிகம் பண் காந்தாரபஞ்சமம் 4-ஆம் திருமுறை

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

"I bow unto the Lord who is the 'word' in the word and who is the celestial light. Even when they tie to a stone and throw into the sea, Namasivaya (the Panchakshara) proves to be the only salvation(way out.)

(தொடரும்)

"ஞானசம்பந்தம்"
அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க் கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,
உள்நாடு ரூ. 2 - 25 * வெளிநாடு ரூ. 3 - 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.
தருமபுரம், மாயூரம் P. O.

சங்கோய் இலக்கியம்

திரு. கு. பழநிசாமி அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கல்லூரி, அருள்நந்தி நகர்.

———o———

வேங்கையின் நிழலில் விளையாட்டு

காதளவோடிய கருங்கண், கனிபோல் இருக்கும் செவ்வாய், சீதளம் தேங்கிய திருமுகம், செழுமை விளங்கும் உடல். இப்படிக் கவர்ச்சி மிகுந்த தோற்றத்துடன் கூட்டமிட்டாடி மகிழ்ந்து குறவர் மகளிர் பலபேர் வேங்கை மரத்தின் நிழலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கையின் தோற்றமும், அருமை நிறைந்த அதன் கொழுவிய நிழலும் அவர்கள் நெஞ்சில் புத்துணர்ச்சியைத் தூண்டிவிட்டிருந்தன.

வேங்கை மலரைக் கொய்தும், வேண்டியவாறு ஆடியும், அச்சமின்றித் திரியும் ஆயமாக அது காட்சி யளித்தது. இயற்கையின் அழகு குலுங்கும் காடு எழில்பெற மலர்ந்த வேங்கை. அதற்கும் கீழே மங்கையர் குழாத்தின் பூரிப்புமிக்க ஆட்டம். சற்றுத் தூரத்திற்கு அப்பால் நக்கீர தேவர் இதனைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தார். இயற்கைப் படைப்பின் பல்வேறு வியப்புக்களில் அவரது நெஞ்சம் ஒன்றிக் கிடந்தது.

உலகம் என்றுமே இப்படி இன்பமாய் இருந்து விட்டால் என்ன? யாருக்கும் இடர் விளைக்காத இவ்வின்பத்தில் இடர் எதுவும்தான் இல்லையே! இப்படி அவர் நினைந்து நெடு நேரமாக வில்லை. அவருக்கு எதிரே ஆடிக்கொண்டிருந்த பெண்களின் ஆட்டம் திடீரென்று நின்றது. மருட்சி யடைந்திருந்த பெண்களுள் ஒருத்தி திசை யொன்றை நோக்கிச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தாள். எல்லோரும் அவள் கைவழி நயனம் செல்லக்

கண்டார்கள். கூச்சலும் குழப்பமும் மிகுந்தது. ஒரே நொடி தான். மின்னலென ஒல்கி மறைந்தார்கள் அனைவரும்.

புலவர் அந்தத் திசையில் மெல்ல நோக்கினார். வெறி பிடித்தது போன்று வேங்கை யொன்று பாய்ந்து வந்து கொண்டிருந்தது.

சீ...சீ... மண்ணுலகின் இன்பம்தான் எவ்வளவு நிலையற்ற தாகவும், குறுகியதாகவும் இருக்கின்றது! துன்பமும், துயரமும் எப்போதும் தொடர்ந்து கொண்டே யிருக்கின்றனவே! இவ் வுலகின் வாழ்க்கைத் தத்துவம் எவ்வளவு உயர்வாகச் சில சமயங் களில் காட்சி யளித்த போதிலும் வேதனையோடு பிணைந்து இருப்பதனையே அவர் உணர்ந்தார்.

இன்பங்களை இந்த உலகில் நிலையாக அனுபவிக்க முடிவ தில்லை. துன்பம் மறுமுனையில் காத்துக்கொண்டே யிருக்கிறது. ஆனால் அத் துன்பத்தை முன்னரே அறிந்துகொண்டு அத னின்றும் விலகிப் பேரின்ப நெறிசேர, தோன்றாத் துணையாக இருக்கின்றான் இறைவன் என்பது மட்டும் உண்மைதான்.

ஆடிக்கொண்டிருந்த பெண்கள் தொடர்ந்து ஆடமுடிய வில்லை என்றாலும், வரவிருந்த துன்பத்தைக் காட்டி அதனின் றும் அப்பேதையர்களைக் காப்பாற்றி விட்டான் ஈங்கோய் இறைவன். இன்பமயமான சூழல் ஒன்று சற்று நேரத்தில் துன்பக்குருதியில் புரண்டு துடிக்க இருந்ததனைத் தடுத்து நிறுத்திவிட்டான். இப்படி இன்பமும் வைத்து, துன்பமும் வைத்து அத் துன்பங்களிலிருந்தெல்லாம் பலபொழுது அன் பொடு காக்கின்ற தன்மையும், இறைவன் கொண்டிருப்பது தான் எதற்கு? இப்படி இன்பமும் துன்பமும் காட்டுவதனால் உலக இன்பத்தின் நிலையாமையை உணரச் செய்து, தூயதாகிய பேரின்பத்தைப் பற்றி எண்ணச் செய்து அங்கே வாருங்கள் என அழைப்பது தான் அவனது நோக்கம் போலும். கவிஞரின் சிந்தனை விளைத்த பாடல் கீழே காணப்படுகிறது.

கோங்கின் அரும்பழித்த கொங்கைக் குறமகளிர்
வேங்கை மணிநீழல் விளையாடி—வேங்கை

வரவதனைக் கண்டிரியும் ஈங்கோயே துன்பம்
வரவதனைக் காப்பான் மலை.

இளமாதே என்னோடு வா

பல காலங்களுக்கு முன்னர் ஒருநாள். அந்தக் காட்டில் ஓர் யானைக்குப் பயந்து குறமகள் ஒருத்தி ஓடினாள். இதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தார் ஒரு கிழவர். பிறகு அந்த முருகன் அந்த வள்ளியை யானையிடத்தினின்றும் காப்பாற்றி மணமுடித்துக் கொண்டான் என்பது நமது கதை. அன்று காட்டில் நிகழ்ந்த அதே நிகழ்ச்சி போன்று ஆனால் சற்று மாறுதல்களுடன் ஈங்கோய் மலையிலும் ஒரு காட்சியைக் காட்டுகின்றார் கவிஞர்.

மேனியில் அசைவு தோன்றிவிட்டது. தளர்ந்துபோன நடை இருப்பினும் கரங்களிலிருந்து இன்னும் வில்லும் வேலும் விடைபெறவில்லை. ஆக வயதான ஒரு வேட்டுவக் கிழவர் அந்தப் பாதையில் சென்று கொண்டிருந்தார். திடீரென்று பெண்ணொருத்தியின் அவலக் குரல் முன்னரே தளர்ந்து போயிருந்த அவரது நடையினை முற்றிலும் தடைசெய்து விட்டது. செவிகளைச்சற்றுக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்டார். குரல் வந்த திசை நோக்கி அவரது கால்கள் இளைஞனது கால்கள்போல் ஓடத்தொடங்கின.

"ஐயையோ! யானை..."என்று அலறியது அப்பெண் குரல். வியர்க்க விறுவிறுக்கக் காட்டுப் பரப்பில் கல்லிலும் முள்ளிலுமாகத் தட்டுத் தடுமாறி ஓடிவந்துகொண்டிருந்தாள் அந்த மங்கை. அவளுக்குப் பின்னால் யானை ஒன்று அவளைத் துரத்தி வந்துகொண்டிருந்தது. நிமிர்ந்து பார்த்த அவள் "தாத்தா" என்று ஓடி வந்து கட்டிக்கொண்டாள். "தெரியாமல் இந்த வழியில் வந்து மாட்டிக் கொண்டேன். இந்த யானை...." அவளுக்குப் பேசமுடியாமல் மூச்சுத் தடுமாறியது.

"பயப்படாதே அம்மா. இப்படி அஞ்சுகின்ற பெண் தனியாக வரலாமா? இங்கேதான் அடிக்கடி யானைகளின் தொல்லை அதிகமாயிற்றே. அதோ பார் அந்த யானை நின்று விட்டது. இப்போது நீ எங்கே போகிறாய்? எங்கேயுமில்லை வீட்டிற்குத் தான் வந்துகொண்டிருக்கின்றேன் என்றாள் அவள்.

நன்றாக முகத்தை எல்லாம் துடைத்துக்கொள் பயப் படாதே! நானும் வீட்டிற்குத் தான் போகிறேன் பின்னாலேயே வா என்று சொல்லிவிட்டு அவர் நடந்தார். அவரது நெஞ்சம் வேறு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்துவிட்டது. பின்னால் வந்த அப் பெண் இன்னும் பதற்றம் நீங்கிய பாடின்றித் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டு அவரைப் பின் தொடர்ந்தாள். இதனை,

ஏழை இளமாதே என்னொடுநீ போதென்று
கூழை முதுவேடன் கொண்டுபோய்—வேழ
இனைக்குவால் வீட்டுவிக்கும் ஈங்கோயே நந்தம்
வினைக்குவால் வீட்டுவிப்பான் வெற்பு.

என்ற பாடல் கூறியமைகின்றது.

ஏனம் பிடிக்கும் கானவர்

வாழ்க்கை ஒரு போராட்டம். பலவற்றின் அழிவில் தான் பலவற்றின் வாழ்வும் விளங்குகிறது. இன்றைக்கும் மனிதன் வாழவும், இன்பமுற இலங்கவும் எவைகளையெல்லாமோ பலி யாக்கிக் கொண்டுதானிருக்கின்றான். அழிவின்றி ஆக்கமில்லை. ஆக்கமும் அழிவின்றியில்லை. இதுதான் வாழ்க்கைச் சக்கரம். தன் இன்பம் கருதித் தனக்குத் தொல்லை கொடுக்கின்றவைகளை அழித்தல், தொல்லை கொடுக்காதவைகளையும் தனது இன்பத் திற்காக அழித்தல், இவ்விரண்டு வகையிலும் தான் மனிதனின் வாழ்க்கை ஓடுகிறது.

ஈங்கோய்மலை வேடர்களும் அப்படித்தான் தங்கள் வாழ்க் கையினைச் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். தங்கட்குத் தொல்லை கொடுப்பன வற்றையும், தொல்லை தராதனவற்றையும் ஒருசேர வேட்டையாடிக் கொல்வார்கள் அவர்கள்.

காட்டுப் பன்றி பயிர்களை அழித்துக் கேடு விளைக்கும். அதனைக் கொன்றால் அவர்களுக்கு ஓரளவிற்கு நிம்மதி. அதன் ஊனும் சுவை மிகுந்த உணவாகப் பயன்படும், இரண்டு வகைக் காகவும் வேடர்கள் காட்டுப் பன்றியைக் கொல்ல நினைக் கின்றார்கள்.

பெரும்பாணாற்றுப் படையும், இவ் வளை மருப்பேனம் வரவு பார்த்திருக்கும் வேடர்களைப் பற்றிப் பேசுகின்றது.

மான்அடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதில் நீர்தசைஇக் குழித்த
அகழ்சூழ் பயம்பின் அகத்தொளித் தொடுங்கி
புகழா வாகைப் பூவின் அன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கும்.

என்று கானவர்களின் ஏனவேட்டையைப்பற்றிக் குறிப்பிடுகிறது அந்நூல். கோடைக்காலத்தில் நீருக்காக வெட்டிய குழிகளிலில் பதுங்கியிருந்து அங்குவரும் பன்றிகளை கொல்லக் காத்திருக்கின்றனர் வேடுவர்கள் என்பது இதன் பொருளாகும்.

ஈங்கோய் மலைக்காட்டில் அவைகளை வலை வைத்துப் பிடிக்கின்றனர்கள். பகற்போதெல்லாம் கள்ளுண்டு களித்தனர் வேடர்கள். இரவு வந்தது ஏதாவது வேட்டையாடிக் கொண்டு வரவேண்டும் என்ற உணர்வுடன் மதுவினையும் அருந்திவிட்டு வேண்டிய வலை முதலான கருவிகளையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். அடிக்கடி பன்றிகள் நடமாடுகின்ற இடமாகப் பார்த்து வலையை விரித்து வைக்கின்றனர்கள். பின்னர் பக்கத்திலே உள்ள மறைவிடங்களிலே சென்று ஒடுங்கிக் கொள்கின்றனர்கள். ஆனால் இன்னும் பன்றிகள் ஏதும் சிக்கவில்லை. இக்காட்சியினைப் பின்வருமாறு கூறுகின்றனர் புலவர்.

நறவம் நனிமாந்தி நள்ளிருட்கண் ஏனம்
இரவில் இயங்குவான் பார்த்துக்—குறவர்
இரைத்துவலை தைத்திருக்கும் ஈங்கோயே நங்கை
விரைத்துவலைச் செஞ்சடையான் குன்று.

முன் யோசனையுள்ள யானைகள்

யானைகளும் இவ்வாறே கானவர்களுக்குத் தொல்லை தருவதாகும். யானைகளைக் கொல்வதிலும் அவைகளைப் பிடிப்பதிலும் பல்வேறு வகைகளை வேடுவர்கள் கையாள்வார்கள். அவைகள் வருகின்ற வழியில் பெரும் பெரும் பள்ளங்களை வெட்டி அதனை மெல்ல மூடியிருப்பார்கள். சாதாரணத் தரைக்கும் அதற்கும் வேற்றுமை தெரியாத யானை அதில் விழுந்து மாட்டிக் கொள்ளும். சிலபோது குழிகளை வெட்டி அதன்மேல் படல் இட்டு மண்ணைத் தூவி வாழை மரங்களையும் பசிய கொடிகளையும் நட்டுவைப்பர்கள்.

அதனை மெய்யெனக் கொண்டு வரும் யானையானது அதனுள் விழுந்து அகப்பட்டுக் கொள்ளும். பின்னர்ச் சில நாட்கள் கழித்து அதன் கொட்டம் அடங்கவிட்டு அதனைப் பிடித்துக் கொண்டு வருவர். ஈங்கோய் மலைச்சாரல் வெளியில் இவ்விதம் தங்களை அகப்படுத்துவதற்காக வேடர்கள் குழிதோண்டிக்கொண்டிருப்பதனை ஒருகால் யானைகள் கண்ணுற்றன. அவைகளை அச்சம் பிடித்து விட்டது. தங்களைப் பிடிப்பதற்குத்தான் குழி தோண்டுகிறார்கள் வேடர்கள் என்பதனை அறிந்து கொண்டன மருண்டு போய் அன்று தங்கள் தங்கள் இடம்போய்ச் சேர்ந்து அமைதியடைந்தன.

மறு நாளும் இடம் விட்டுப் பெயராமல் இருக்க முடியுமா என்ன? உணவிற்காக வெளியில் திரிந்துதான் ஆக வேண்டும். ஆனால் எங்கெங்கெல்லாம் அவர்கள் குழி பறித்திருப்பார்கள்? எது உண்மைக் குழி? எது பொய்க்குழி? எப்படி இவைகளை அறிந்து கொள்வது என்பதே அவைகளுக்குச் சிந்தனையாகப் போய்விட்டது, இறுதியில் அவைகளும் ஒரு யோசனையை மேற்கொள்ளவே செய்தன.

மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் ஒரு பெரிய தண்டினைத் தம் தும்பிக்கையில் பற்றிக் கொண்டு நிலத்தில் ஊன்றி ஊன்றிப் பார்த்துக் கொண்டே செல்லத் தொடங்கின. இவ்வாறு செல்லும் போது பொய்க்குழிகளாக இருந்தால் தண்டைத் தும்பிக் கையால் ஊன்றும் போதே தெரிந்துவிடும். இவ்வாறு அச்சத்துடன் யானைகள் தண்டை ஊன்றிக் கொண்டு நடப்பதில் ஓர் அழகும் தென்படுகின்றது என்கின்றார் கவிஞர்.

கொடுவில் சிலைவேடர் கொல்லை புகாமல்
படுகுழிகள் கல்லுதல்பார்த் தஞ்சி—நெடுநாகம்
தண்டூன்றிச் செல்லும்சீர் ஈங்கோயே தாழ்சடைமேல்
வண்டூன்றும் தாரான் மலை.

என்பது அப்பாட்டு. அடுத்து, ஈங்கோய் மலையில் தென்படும் பறவையினங்களின் சிறப்புக் காட்சிகள் சில வற்றைக் கண்டமைதல் சாலும்.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 14, இதழ் 11-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

37. திருவேயென் செல்வமேதேனேவானோர்
 செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற்சோதிமிக்க
உருவேயென் னுறவே யென்னூனேயூனி
 னுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென் கற்பகமே கண்ணேகண்ணிற்
 கருமணியே மணியாடுபாவாய்காவாய்
அருவாயவல்வினைநோயடையாவண்ண
 மாவடுதண்டுறையுறையுமமரரேறே.

37. O wealth, my treasure, sweetness, lustre fair of heavenly hosts,
 Of lustre glory that excels, embodied One, my kin,
My flesh, yea heart within my flesh, image within my heart,
 My all-bestowing tree, my eye, pupil my eye within,
Picture seen in that pupil, lord of Aduturai cool,
 Immortals' king, keep far from me strong pain of fruits of sin.

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

சேக்கிழார் கவி வளம்

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்
தமிழ்ப்பேராசியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

ஒருவனுடைய வாழ்நாளில் கிடைத்தற்கரிய பேறு கிடைத்து வாழுங் காலத்தை அவனுடைய பொற்காலம் என்போம். அதே போன்று வரலாற்றில் செயற்கரிய செயல்கள் நிகழ்ந்த காலத்தை வரலாற்றின் பொற்காலம் என்போம். அங்ஙனம் எண்ணுகின்ற பொழுது சமய உலகிற்குப் பொற்காலமாக அமைந்தது பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆகும். சைவ உலகிற்குப் பெருவைப்பாகவுள்ள திருமுறைகள்பன்னிரண்டனுள் பன்னிரண்டாந் திருமுறை எழுந்ததும், தொல்காப்பிய உரையாசிரியர்களில் முதல் உரையாசிரியராகிய இளம்பூரணர் வாழ்ந்ததும், கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன் எனப் புகழ்தற்கு உரிய ஒட்டக்கூத்தர் வாழ்ந்ததும் இந்நூற்றாண்டே யாகும்.

இந்நூற்றாண்டில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றித் தெய்வ மாக்கவிஞராய் வாழ்ந்தவர் நமது சேக்கிழார் பெருமான் ஆவர். சோழப் பேரரசின் முதல் அமைச்சராய் விளங்கிய திறத்தால் உலகியல் அனுபவமும், திருநாகேச்சரத்துப் பெருமானை இடையறுது வழிபட்டு வந்த பேற்றால் உயிரியல் அனுபவமும் ஒருங்கு வாய்க்கப் பெற்றவர் இவர். இவர் தம் நாட்டிற்கும் அரசனுக்கும் செய்த பெருந்தொண்டுகளில் தலையாயதும், நிலையாயதும் ஆனது இத்திருமுறையை அருளிச் செய்ததே யாகும். பாண்டியனைப் பண்பு தேற்றி முத்திக்கே வித்திட்டார் ஒரு முதலமைச்சர். இவர் சோழனைப் பண்பு தேற்றி முத்திக்கே வித்திட்டார். அம்மட்டோ! அக்காலத்து வாழ்ந்த

சைவ நன்மக்களையும், அன்று முதல் வழிவழியாக வளர்ந்து வரும் சைவ நன்மக்களையும் அன்றே இத்திருமுறையால் வாழ வைத்துள்ளார். இத்திருமுறையைப்பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட ஆக்கியுள்ளார் ஆசிரியர். இம்மணம் இவர்தம் வாக்கில் உயிரோட்டமாய் அமைந்திருப்பினும், இலக்கிய மணம், வரலாற்று மணம் ஆகியவையும் இவர்தம் வாக்கில் இன்பம் குன்றாது வீசுகின்றன. அவற்றை ஒரு சிறிது காண்பாம்:

1. உயிரோவியம் :– தாம் விரும்பிய பொருளை ஓவியமாக எழுதிப் பார்த்து அதனைச் சுவைத்தனர் முன்னோர். ஆனால் இன்றோ அப்படியே புகைப்படமாக எடுத்துக் கொண்டு சுவைக்கின்றனர். பண்டு எழுதிய ஓவியமும் சரி, இன்று எடுக்கும் புகைப்படமும் சரி, இவையெல்லாம் ஒரு கால வரம்பிற்குட் பட்டுக் காண இனிதாகும்; பின் அவை நலங்குன்றும். ஆனால் கவிஞர் எழுதும் உயிரோவியங்களிலோ அவர்கள் எழுதிய ஞான்றினும் அந்நலம் வளர்ந்து கொண்டே போகின்றன. காண்போர் நோக்கிற் கேற்பப் புதிய புதிய அழகு தோன்றி மிளிர்கின்றன. இன்னொரு புதுமையும் இதில் உண்டு. ஓவியக்காரர்களோ, புகைப்படம் எடுப்பவர்களோ தத்தம் கண்ணுக்குப் புலனாகிய பொருள்களையோ, அன்றி அவற்றின் உருவங்களையோ தான் எழுதவும், எடுக்கவும் முயல்வர்; அவையும் அமையும். ஆனால் கவிஞர்களோ தாம் இதுவரை கண்டிராத பொருள்களையும் கற்பனையால் கண்டு, ஆனால் பிறர்க்குத் தாம் கண்ட பொருள்களையே எடுத்து வரைவார் போலக் காட்டும் பெரும் வித்தகம் உடையவர்கள்.

இந்நிலையில் நமது சேக்கிழார் பெருமான் பெரிதும் உயர்ந்து விளங்குகின்றார். அப்பர் பெருமான் சமய லங்கனம் செய்தவர் எனக் கேட்ட பல்லவன், அவரை வெறுத்தும் ஒறுத்தும் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக்கினன். இறுதியாகக் கற்றூணைப் பூட்டிக் கடலில் பாய்ச்சினன். அப்பெருமானும் நற்றுணையாய நமச்சிவாயவெனும் திருவைந்தெழுத்தால் உய்ந்து, திருப்பாதிரிப் புலியூரில் கரையேறித் திருவதிகை எழுந்தருளினர். அடியவர் அனைவரும் எதிர்கொண்டனர். அப்பர் பெருமானின் திருமேனி நலத்தினை அனைவரும் கண்டு வணங்கி இக்கருணைப்

பெருக்கிற்கோ இத்துணை தீங்கு நேர்ந்ததுஎன வருந்தினர். இங்ஙனம் திருவதிகையில் அப்பர்பெருமான் எழுந்தருளியபோது இருந்த அவரது திருவுருவத்தை புகைப்படம் எடுத்தாற் போன்று நமக்கு எடுத்துக் காட்டுகிருர் சேக்கிழார்.

அவ்வுயிரோவியம் வருமாறு :—

"தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழிகண்ணும்
பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே."

இவ்வோவியத்தில் அப்பர் பெருமானின் திருமேனியை மட்டும் படம்பிடித்துக் காட்டிஞரல்லர் சேக்கிழார். அவர் தம் திருவுள்ளத்தின் நினைவையும் படம்பிடித்துக் காட்டுகிருர். 'நாயகன் சேவடி தைவரும் சிந்தையே அவர்தம் சிந்தை என்பது எத்தகைய ஓவிய வல்லுநராலும், புகைப்படம் எடுப்பவராலும் எழுதியும், எடுத்தும் காட்ட இயலாததாகும். இத்தகைய ஓவியத்தை எங்ஙனம் வரைந்தார் என்பதையும் சிறிது ஆராய்வாம்.

படம் எழுதுவோரும் எடுப்போரும் எல்லாம் பொருள்களின் புறத்தோற்றத்தை மட்டுமே முன்நிறுத்திக் கொள்வார்கள். ஆனல் நமது அருட்கவிஞரோ அப்பொருளின் உள்ளத்தையும் அதன் வாயிலாக அவர்தம் வாக்கிலெழும் திருவாக்கையும் முன் நிறுத்திக் காண்பர்.

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"

என்பது அப்பர் பெருமானின் திருவாக்கு. இத் திருவாக்கே 'நாயகன் சேவடி தைவரு சிந்தையும்' என எடுத்துக் காட்டிற்குக் காரணமாயிற்று. இங்ஙனம் இவர் எடுத்துக்காட்டும் உயிரோவியம் என்றென்றும் அழியாது நம் மனத்தகத்து நின்று நிலை பெறுவனவாகும். சீர்காழியிலும், திருவாரூரிலும் இங்ஙனமே

அவர் எடுத்துக் காட்டிய ஓவியங்கள் என்றும் நம் மனத்தகத்து நிற்பனவாகும். அவை வருமாறு:—

"மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாழும்ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச்செல்வார்."

"சிந்தை இடையறு அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாங் கருத்தும் கைஉழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசும் எதிர்வந் தணைய."

இவ்வழகிய உயிரோவியத்தையே பின்வந்த சிவஞான சுவாமிகளும் சிறிது புதுக்கி எழுதிக் காட்டியுள்ளார்.

இடையருப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின்
படையருத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையருச் செவ்வாயும் சிவவேடப்பொலி வழகுந் துதித்து வாழ்வாம்.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பெருமானைப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த நமது சேக்கிழார் உயிரோவியமாகக் கவிதையில் எழுதிக்காட்டி, அத்திருவுருவத்தை இன்றும் என்றும் நாம் வணங்கி வாழுமாறு செய்துள்ளார். இத்தகைய அருட்கவிகளை நினைந்துதான் நமது குமரகுருபர சுவாமிகளும்,

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க்(கு) ஒவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு

எனக் கூறினர் போலும்!

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the
Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

5

Thinking is the special feature of the human beings. But this often leads him to the worse when he is not properly guided. His vain thoughts become fruitless and he is always confronted with confusion. But when the grace of the Supreme Being dawns upon him and inspires his power of thinking from within he goes to a higher plane. His thoughts get purified and become useful to himself and to the whole world.

In this couplet our saint Thayumanar regrets for his futile thoughts in the past and so with an agonising heart he entreats the Lord to bestow grace and to direct him in the right path.

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே

(பொ-உரை) எண்ணக் கூடாத பலவற்றைப் பற்றி உனது அருள் இன்றி எண்ணி எண்ணிக் களைத்து விட்டேன். வருந்துதற்குரிய எனது இதயம் புண்ணாகி வலிக்கின்றது. மீண்டும் என்னைத் துயர்கூரும் எண்ணங்களில் ஆழ்த்தி வருத்தாமல் அருள்புரிவீராக.

Oh........Lord Supreme! As you have not liberated me, I have thought repeatedly over undeserving and fruitless thoughts and find myself now completely wearied. My poor heart is full of torments. Let me not again be a prey to such futile thoughts. Grant me grace.

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

ஒரு ஆராய்ச்சி :

திருவருள்

திரு. தா. ஐ. ஏசுதாஸ் அவர்கள், எம். ஏ., எம். லிட்.
துணைப் பேராசிரியர், மெய்ப்பொருள் துறை.
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அருள், தண்ணளி, ஈரம், கண்ணோட்டம், கருணை, தயை, கிருபை, பிரசாதம், அநுக்கிரகம் என்னும் சொற்கள் ஒன்றையே குறிக்கின்றன. கிரேக்க மொழியில் அருள் அழகென்னும் பொருளைத் தருகின்றது. அழகு, இயற்கை அழகு. நம் முயற்சியால் வருவது அல்ல; அது ஆண்டவன் அருளுவதினால் பெறப் படுவது. எனவே, அழகு அருளெனப்படுவது தகுதியே. இலத்தின் மொழியில் அருள் அன்பளிப்பை, தாட்சணியத்தைக், குறிக்கும். மற்றொரு பொருளும் அருளிற்கு உண்டு. அதாவது நன்றி தெரிவித்தல். உணவை உட்கொள்வதற்கு முன்பு கடவுளுக்கு நன்றி செலுத்தும் ஜெபத்திற்கு அருள் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அருளுக்கும் அன்பிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அருள் அன்பு ஈனும் குழவி என்கிறார் திருவள்ளுவர். அன்பு நற்றாய்; பொருள் செவிலித்தாய் என்பது அவரது வாக்கு. தன்னிலும் தாழ்ந்த ஒன்றிற்கு அன்பு பாராட்டுதல், அருள் பாலித்தல். துன்பத்திலுள்ளோருக்கு நன்மை செய்வது அருள். தன்னை மறந்து பிறர்பொருட்டுச் செய்வது, பிறருக்காக வேண்டுவது ஆகியவை அருள்.

அருள் மூவகைப்படும் என்கிறார் அறிஞர் ஆல்டுஸ் ஹக்ஸ்லி. அவை பிராணி அருள், மனித அருள், திருவருள் எனப்படுகின்றன.

ஆன்மாவிற்கு அனுபவத்தைக் கிட்டச்செய்வது திருவருள். சைவ சித்தாந்தப்படி திருவருள் துணைக் காரணம். சிவஞான

போதம் திருவருளை இரும்பை இயக்கும் காந்த சக்திக்கு உவமிக்கிறது. திருவருளை நெருப்புத் தணலுக்கு ஒப்பிடுகிறார் திருஞானசம்பந்தர். மலை அளவுள்ள விறகுக் குவியலை ஒரு சிறிது நெருப்பு சாம்பலாக்கி விடுவது போன்று கர்ம மலத்தைத் திருவருள் நொடியில் நீக்கிவிடும் என்பது அவரது வாக்கு. ஒரு கல்லை எறிந்தால் காக்கைக் கூட்டம் கலைந்து ஓடி விடுவது போன்று கருமையாகவும், பலவாகவும் உள்ள வினைத் தொகுதியை அருள் வீழ்ச்சி அக்கணமே அகற்றிவிடும் என்பது தாயுமானவரின் அருளிப்பாடு.

திருவருள் ஆன்மாவை விழிப்புறச் செய்கிறது; பக்குவப் படுத்துகிறது. இருள் மலத்தால் பந்தப்பட்டிருக்கும் பசுவாகிய ஆன்மாவை உய்விக்கும் திருவருள் பதிஞானம் என்றும் பெயர் பெற்றுள்ளது. திருவருள் ஆன்மாக்களைத் தன்னிடம் வர வழைத்துக், கூட்டிச் சேர்த்து, பிரகாசிப்பித்து, பரிசுத்தமாக்கிக் காப்பற்றி வருகிறது என்கிறார் மார்த்தீன் லூதர்.

திருவருள், ஆதரவுதரும் அறக்கருணை யாகவோ அல்லது தண்டித்துத் திருத்தும் மறக்கருணையாகவோ இயங்கக் கூடும். மறக்கருணை கோபப் பிரசாதம்; இங்கு தண்டம் தயாகாரியம். திருஞானசம்பந்தர் இராவணன் கோபப்பிரசாதம் பெற்ற செயலைத் தமது பதிகம் பலவற்றினுள்ளும் பாடியுள்ளார். ஆண்டவன் ஆன்மாவை அருள் எனும் தடியால் அடிப்பதுண்டு என்று திருவாய் மொழி சான்று பகருகிறது.

தடுத்தாட் கொள்ளும் திருவருள் மற்றொருவகை. இது முந்திக் கொள்ளும் அருள் என்றும் பெயர் பெறும். சுந்தரர் திருமணச் சடங்கின்போது தடுத்தாட் கொள்ளப்பட்டார். அப்பர் குடல் நோயைப் பெற்றுத் திருந்திய நிகழ்ச்சி மறக்கருணையை யும் தடுத்தாட்கொள்ளும் திருவருளையும் ஒருங்கே சுட்டுகிறது. மாணிக்கவாசகரும் குதிரைகள் வாங்கச் சென்றபோது தடுத் தாட்கொள்ளப்பட்டார். கல்லால மரத்தின் கீழ் ஞானாசாரிய ராகச் சிவபெருமானே தோன்றி அவரை ஆட்கொண்டது திருவருட்பயன் என்ற சித்தாந்த நூல் கூறுவது போன்று அருளுரு நிலையாகும்.

மேலும், இவ்வாறு திருவருள் மன்னித்தல், மீட்டல், மறைத்தல், நீதிமானுக்கல், தொடர்தல் ஆகிய செயல்களை ஆன்மாவின் பொருட்டுச் செய்கின்றது. உலகம் படைக்கப்பட்டுக் காக்கப்படுவது ஆன்மா அனுபவத்தைப் பெறவும், உலகம் அழிக்கப்படுவது ஆன்மா ஓய்வு பெறும் பொருட்டும் ஆண்டவனது திருவருட்செயல்களே.

வீரத்தோடு கூடிய அருள் அருளாண்மை எனப்படும். இதனைச் சைவசமயாசாரியர்கள் வாழ்விலே காண்கிறோம். இப்படிப்பட்ட திருவருளின் தூண்டுதலினால்தான் அப்பர் "நாம் யார்க்கும் குடி அல்லோம்" என்று பெருமிதத்தோடு கூறுகிறார்; மார்த்தின் லூதர் சமயப்புரட்சி செய்தார்.

ஒழுக்க சாத்திரத்தில் திருவருள் சம்பந்தமாக இரண்டு பிரச்னைகள் எழுகின்றன. முதலாவது கருமவிதியும் திருவருளும் ஒன்றிற் கொன்று முரணானதா என்பது. அருள் நியாயப் பிரமாணத்தைத் தொலைக்காது; அதை நிறைவேற்றி, அதற்கு அப்பாலும் செல்லுகிறது. அருள் வாழ்க்கையில் நல்லொழுக்கம் இயற்கையாய் நடைபெறும் ஒரு காரியம். இவ்வாழ்க்கையில் நிற்பதற்குச் சன்மார்க்க நெறிநிற்போன் செய்ய வேண்டிய தனிமுயற்சி ஒன்றும் தேவைப்படுகிறதில்லை. திருவருளும் மனிதனின் சுய முயற்சியும் ஒன்றிற்கொன்று முரண்படுகின்றனவா என்பது இரண்டாவது பிரச்னை. பொதுவாக நீதிநூல்கள் சுயமுயற்சியின் மூலம் ஆன்மபலம் பெறுவதை வற்புறுத்துகின்றன; அருள் நூல்கள் பலமற்றவரும் கடைத்தேறமுடியும் என்று ஆறுதல் அளிக்கின்றன. சமயசாத்திரங்கள் சுயமுயற்சி வழியைக் குரங்குக் குட்டி அல்லது ஏணி வழி என்றும் அருள் முறையை பூனைக்குட்டி அல்லது தோணி முறை என்றும் கூறுகின்றன. மடைபாய்ந்து கதிர் வைக்காது; மழை பெய்துதான் கதிர் வைக்கும் என்று கூறும்போது மடைபாய்ச்செய்வது சுயமுயற்சியையும்'மழை பெய்தல் அருளையும் குறித்து அருளிற்கு ஏற்றம் தருகின்றது. முற்றும் துறந்த பட்டினத்தடிகள் கூடத் தமக்குப் பூனைமார்க்கமே ஏற்றது என்று கூறுகிறார்.

(தொடர்ச்சி 644-ஆம் பக்கம் பார்க்க.)

அகம்பல் மால் ஆதனர்

வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அகம்பல்மால் ஆதனர் "இருநிலங் குறையக் கொட்டி" எனத் தொடங்கும் நற்றிணை 81ஆம் பாடலைப் பாடியவர். இவரது வரலாற்றுக் குறிப்பு எழுதிய நற்றிணை உரையாசிரியர் திரு. நாராயணசாமி ஐயர், 'இவர் முல்லைத் திணையை அலங்கரித்துப் பாடியுள்ளார். இவர் பாடலிற் கிளவித் தலைவன் வினைவலபாங்கனாக வைத்தமை ஆராயத்தக்கது'—என, பாடினோர் வரலாற்றில் கூறியுள்ளனர். (நற்றிணை, பாடினோர் வரலாறு பக்கம் 1).

முல்லைத்திணை வருணனை என்றால் நிலம், பொழுது ஆகிய முதற் பொருளையும், மரம், புள், மாந்தர் இவர் இயல்புகளையும், கருப்பொருள்களையும் வர்ணித்துப் பாடியிருக்க வேண்டும். இப் பாட்டில் அது இல்லை.

.........................' பூண்தாழ்
ஆக வனமுலைக் கரைவலம் தெறிப்ப
அழுதனள் உறையும் அம்மா அரிவை '

என முல்லையின் உரிப்பொருளாகிய இருத்தலின் இயல்பு கூறிற்று. இது முல்லை நில வருணனை ஆகாது.

கிளவித் தலைவராக வினைவல பாங்காயினர் கூறப்பெறார். அப்படிக் கூறின் அது அகப்புறமே யாகும். இதனை,

" அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர் "

என்னும் அகத்திணை 23-ஆம் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் உரைத்த உரையானும் அறிக. இங்கு அடியோர்—குற்றேவல் செய்வோர்; வினைவல பாங்கு ஆயினோர்-பிறர் ஏவிய தொழிலைச் செய்தலில் வல்லவர், என்பது அவர் உரை. கைக்கிளை, பெருந் திணைக் கண்ணும் வரப்பெறுவர். அங்ஙனம் கூறின் அகப்புறத் தின் பாற்படும், என்பதும் அவர் உரை. ஆதலின் அகத்திணை

நுதலிய நற்றிணைக்கு இவ்வாறு வினைவல பாங்கு ஆயினுர் கிளவித் தலைவனுக வைத்துக் கூறியது பொருந்தாது. ஆதலின் "ஆராயத்தக்கது" என்றனர் நாராயணசாமி ஐயர்.

பின் கிளவித் தலைவனுக வைத்துப் பாடியவன் யாவனே வெனில் "உறுபகை தணித்தனன் உரவுவாள் வேந்தே" என வருவதால் இக்கிளவித் தலைவன் ஷெ அகத்திணையியலில் "ஏவன் மரபின் ஏனேரு முரியர்" (சூத்-24 அகத்திணையியல்) என்ற விதிப்படி பிறரை ஏவிக்கொள்ளும் தலைமையராகிய குறுநில மன்னரும் அரசராற் சிறப்புப்பெற்ற ஏனேரும் உரிப்பொருள் தலைவராதற் குரியர்' — என்ற நச்சினுர்க்கினியர் உரையின்படி இந்நற்றிணைப் பாட்டின் (81) கிளவித் தலைவனுக வைத்துக் கூறியவன் குறுநில மன்னனுகவோ, அன்றி அரசராற் சிறப்புப் பெற பிற வருணத்தன் ஆகவோ இருத்தல் வேண்டும்.

முன் 642-ஆம் பக்கத்தொடர்ச்சி)

பொதுவாக ஞானமார்க்கத்தை வற்புறுத்துவோர் சுய முயற்சியையும், பக்தி மார்க்கத்தை வற்புறுத்துவோர் அருளை யும் உயர்வாகக் கூறுவதுண்டு. ஆனுல் சைவசித்தாந்தம் ஞானத்திற்கு முதலிடம் தருகிறது; அதேசமயத்தில் திருவருளைப் பதிஞானமெனக் கூறுகிறது.

திருவருள் இல்லாமல் நாம் இருக்க முடியாது; நம்மை இல்லாமல் திருவருள் இயங்காது என்று அகுஸ்தீன் கூறியுள் ளார். மனிதன் கடவுளை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் கடவுள் மனிதனை நோக்கி ஓடோடியும் வருவார் என்கிறது ஒழுக்க மறுமலர்ச்சி இயக்கம். கடல் மீது காற்று எப்பொழு தும் இருக்கிறது; ஆனுல் பாய்மரத்தை விரித்தால்தான் அதனுல் பயன் பெறலாம். ஆகவே, அருளைப்பெற ஓர் அளவு சுய முயற்சியாகிய அருள் நாட்டமும் தேவை என்ருகிறது.

திருவருள் மந்தமாகவும், மந்ததரமாகவும், தீவிரமாகவும், தீவிரதரமாகவும் இயங்கக்கூடும் என்று திருமந்திரம் கூறு கிறது. அதன் இயக்கத்தைப் பற்றிய உண்மையும், நுட்பமும் மனிதரால் அறியப்படாததாகவே என்றும் உள்ளது.

சிவ சிவ

திருவிடைமருதூரில்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள்
அன்னம்பாலிப்பு நிதி ரூ. 5000/-

'திருவலஞ் சுழியைங் கரத்தனு லயமெனத்
திருவேர கப்பதியெனும்
திருநகர முன்பொரு லயமெனச் சேய்ஞலூர்
திகழ்தண்டி யாலயமென
மருவுமா வடுதுறைவன் விடையினு லயமென்ன
வந்தசூ ரியனுலயம்
மகிழ்சூரி யன்கோயி லாமெனச் சீகாழி
வடுகனு லயமாமெனப்
பெருகுசிற் சபைசபா பதியினு லயமெனப்
பேசுதிரு வாரூர்நகர்
பெரியநா யகர்கோயில் என்னவா ஞேர்களும்
பேணுமிசை மத்தியாகத்
தருமருதவனம் -

என்று க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழிற் கண்டவண்ணம் சுவாமிமலை முதலிய தலங்கள் பரிவார மூர்த்தங்களின் தலங்களாக அமையப்பெற்று நடுநாயகமாக விளங்கும் தலம் ஆயதும்,

'பொங்காவரு காவிரிக் கோலக் கரைமேல்
எங்கோன் உறைகின்ற இடைமருது.

'பூசம்புகுந் தாடிப் பொலிந்தழ காய
ஈசன் உறைகின்ற இடைமருது'

என்று இன்னேரன்னவாறு சம்பந்தரும்,

'சிந்தையார் சிந்தை யுள்ளார் சிவநெறி யனைத்து மானுர்
எந்தையார் எம்பி ரானுர் இடைமரு திடங்கொண் டாரே,

'பாதங்கள் பரவி நின்ற பத்தர்கள் தங்கள் மேலை
ஏதங்கள் தீர நின்றூர் இடைமரு திடங்கொண் டாரே'என்றும்.

'கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்...
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே' என்றும்;

'சாலப் பழையர்...பேணும்தொண்டர் இச்சைமிக அறிவர்

'மந்திரமும் தந்திரமும் ஆனூர் போலும், [என்று முள்ளார்.

'பத்தர்களுக்கு இன்பம் பயந்தார் போலும்–இடைமருதுமேவிய
ஈசனுரே'

என்று இன்னோரன்னவாறு திருநாவுக்கரசரும் பாடிய தலமாக விளங்குவதும்,

'வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையில் கட்டவிழ்ப் பித்தும்,
ஓடும் பல்நரி ஊளை கேட்டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்,
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்.........
காம்பவிழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மளித்தும், —

பெரிய அன்பின் அன்பின் வரகுணதேவர் தொண்டுகள் பல செய்த க்ஷேத்திரமாகிய மத்தியார்ச்சுனம் எனப்பெறும் திருவிடைமருதூரில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிவப்பேறு பெற்ற வைகாசி அமரபக்ஷம் திருதியையில் ஆண்டுதோறும் அன்னம் பாலித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமம் நிறுவப் பெற்றது. இது 'திருவிடைமருதூரில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம்பாலிப்பு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற் பொருள் ரூ. 5000/- (ரூபா ஐயாயிரம்) இது ஆண்டொன்றுக்கு 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. சர்க்கார் கடன் பத்திரம் எண் சிஏ. 241619– ரூ. 2000/- சிஏ. 241608–

ரூ. 1000/- சிஏ. 241618- ரூ. 2000/- ஆக ரூ. 5000/- இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப் பெற்று வரும்.

3. இம்முதற் பொருளினின்று கிடைக்கும் வட்டித்தொகையில், தருமத்தை நடத்துவதற்குரிய செலவு போக எஞ்சிய தொகை முழுவதும் 'எழில் மல்கு நான்மறையோர் ஏத்தும் சீர் கொள்' திருவிடைமருதூரில், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாளாகிய வைகாசி அமரபக்ஷம் திருதியை நாளில், ஆண்டு தோறும், அந்தணர், அருந்தவர் ஏழைகளுக்கு அன்னம் பாலிக்கச் செலவு செய்யப்பெற்று வரும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பவும் கால விலைக்கு ஏற்பவும் நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம் பாலிப்பு நடத்தப்பெற்று வரும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப்பெற மாட்டாது. இந்நிதி நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இம்முதற் பொருள் அரசினரால் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் திரும்பவும் முதலீடு செய்யப்பெறும்.

'உருவ மருதரைப், பரவியேத்துவார், மருவிவாழ்வரே'–சம்பந்தர்.

திருப்பனந்தாள்,
15–3–1963. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub - Registrar's office on 16-3-1963 as No. 16 of 1963 of Book 4 volume 50, pages 153-155.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
10170 to '74	பழமொழித்திருமுறை (குறிப்புரையுடன்)	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
10175 to '79	திருவாரூர் நான்மணிமாலை (தெளிவுரை)	ஷை
10180 & '81	11ந் திருமுறை	ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம்.
10182 & '83	கந்தபுராணம் உரைநடை	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
10184 to '88	நவக்கிரகமாண்பு (கோளறு திருப்பதிகமும், காலாபாசத்திருக்குறுந் தொகையும்கூடியது)	ஷை
10189 to '93	அப்பர்சுவாமிகள் திருவிழா வெளியீடு	ஷை
10194	The College Magazine 1962-63	Sri K. G. S. Arts College, Srivaikuntam
10195 & 196	பன்னிரு திருமுறை வரலாறு (முதற்பகுதி) முதல் ஏழு திருமுறைகள்	அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.
10197	நான்கு சைவ அடியார்களின் வரலாறு (Hindi)	
10198	பாரதி ஹிந்தி பத்திரிகை	
10199	ஸ்ரீ சங்கர பகவத் பாதசரித்திரம்	கடையம் G. அய்யா அவர்களால் வெளியிடப்
10200	விக்கிரக வழிபாடு	சுவாமி சிவானந்தர் [பெற்றது.
10201	சிவானந்தத் கனிகள்	ஷை
10202 & 203	கல்யாணி, ஹிந்தியில் பத்திரிகை	ஹிந்தி பத்திரிகை

(வளரும்)

உ

திருப்பனந்தாள் – ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

		ரூ	ந. பை
1	விநாயகர் திருமுறை ...	0	06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3	50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ...	3	00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும் புதிய பதிப்பு) ...	2	75
5*	திருநாவுக்கரசர் தேவாரம்	2	00
6*	சுந்தரர் தேவாரம்	1	30
7*	திருவாசகம் ,, ...	0	56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு) ...	2	90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்) ...	0	56
10*	திருமந்திரம் .. (புதிய பதிப்பு) ...	2	25
11*	பதினோராந்திருமுறை	1	50
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு) ...	0	25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன் ...	0	50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்) (அச்சில்)		
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு ...	0	37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்) ...	3	00
17	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்) ...	1	75
18	கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள்	2	75
19	.. யுத்த தேவகாண்டம்	2	00
20	.. தக்ஷகாண்டம்	1	50
21	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன் ...	0	25
22	கந்தரனுபூதி ...	0	13
23	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன் ...	0	37
24	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும் ...	0	10
25	கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும் ...	0	37
26	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0	50
27	சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0	06
28	திருக்குறள் - அறத்துப்பால் முழுவதும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும் ...	1	50
29	திருக்குறள் – பொருட்பால்	2	50
30	திருக்குறள் – காமத்துப்பால்	1	00
	ஷை 28. 29. 30 திருக்குறள் 3 புத்தகமும் ...	4	00
31	திருக்குறள் மூலமும் குறிப்புரையும் ...	0	75
32	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ...	0	13

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.
Regd No. M. 5574

33	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
34	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
35	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை - மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2 75
36	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	...	1 25
37	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
38	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை	...	1 00
39	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
40	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
41	பெரியபுராணம் – உரைநடை	...	2 00
42	திருவிளையாடற் புராணம் – உரைநடை	...	2 25
43	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 5
44	திருக்கயிலைத் திருமுறை	...	0
45	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
47	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
48	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
49	ஷை ஷை காமத்துப்பால் ஷை	...	1 20
50	அபிராமி அந்தாதி – தெளிவுரையுடன்	...	0 50
51	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
52	கந்தரனுபூதி-தெளிவுரையுடன்	...	0 35
53	திருவாரூர்-திருப்பனுவல்கள்	...	0 10
54	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
55	பழமொழித்திருமுறை	...	0 25
56	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோயில்தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 47, 48, 49) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '63.